Registered as a Newspaper

தரமான
★ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-


இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22 , நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 07 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ற அவ்வல் பிறை 11 (23 - 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 216

### அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றி விட்டுத் திரும்பிய

# தமிழ் ஈழம் மக்கள் மன்ற தலைவர் சுட்டுக் கொலை!

## வல்லைவெளியில் சம்பவம்

வடமராட்சி, அக்டோபர் 23

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வல்லையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

வெள்ளிக்கிழமை அரியாலையில் நடைபெற்ற லெப். கேர்ணல் சந்தோசத்தின் ஓராண்டுப் பூர்த்தி வைபவத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றிவிட்டு இவர் வடமராட்சி மக்களுடன் பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது வல்லைவெளியில் வைத்து பஸ் சிலரால் மறிக்கப்பட்டது. பஸ்ஸில் இருந்து அவர் இறக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வல்லை முச்சந்தியில் இராணுவத்தினரின் சோதனை முகாமைத் தாண்டி பஸ் சென்ற சொற்ப நேரத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது

உப்புவெளிச் சந்தியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் திரு. சிவானந்தசுந்தரத்தின் சடலம் காணப்பட்டது.

சம்பவம்பற்றி கூறப்படுவதாவது:

திரு. சிவானந்தசுந்தரமும் அவரது ஆதரவாளர்களும் பயணம் செய்த இ. போ. ச. பஸ் உப்புவெளிச் சந்திக்கு (வல்லை) அருகில் சில இளைஞர்களால் நிறுத்தப்பட்டது.

அவர்கள் பஸ்ஸில் இருந்தவர்களைச்சோதித்துப் பார்த்தபின்பு எங்கு சென்று வருகிறீர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க]

## பூரண துக்கம் அனுஷ்டிப்பு; நாளை இறுதிச் சடங்குகள்

வடமராட்சி அக். 23

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரத்துக்கு அஞ்சலி செலுத்து முகமாக வடமராட்சிப் பகுதியில் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சேவைகளும், தனியார் மினிபஸ் சேவைகளும் நடைபெறவில்லை.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, புலோலி ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளும், சந்தைகளும் திறக்கப்படவில்லை.

துக்க தினத்தை இன்றும் நாளையும் தொடர்ந்து அனுஷ்டிக்குமாறு வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய மாணவர் ஒருங்கிணைப்புக் குழுக்களையும் துக்கம் அனுஷ்டிக்குமாறும் திங்களன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்

(8ஆம் பக்கம் பார்க்க]

## மாணவர் ஒருங்கிணைப்பு குழு அறிக்கை

யாழ்ப்பாணம், அக் 23

தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரத்தின்மரணம்தொடர்பாக மாணவர்ஒருங்கிணைப்புக் குழு விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கும், நிரந்தர அமைதிக்கும் குரல் கொடுத்துக் கொண்டிருந்ததுடன் உலக அரங்கில் தமிழரின்நிலைப்பாட்டை எடுத்துக் காட்டிய தமிழ் ஈழம் மக்கள் மன்றத் தலைவர் திரு. க. சிவானந்தசுந்தரம் வல்லையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்து மாணவர்களாகிய நாம் ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு வல்வெட்டித்துறை தீருவில் புனிதத் திடலில் இருந்து ஆரம்பமாகும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு சகல மாணவர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-160)

## கடற்றொழில் சமூக அபி. அமைப்பு

வடமராட்சி அக் 23

வடமராட்சி ஒருங்கிணைப்பு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்—

திரு சிவானந்தசுந்தரம் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

எமது இனத்தின் தலைவரை அழிப்பதன் மூலம் எமது இனத்தை அடிமைப்படுத்த எடுக்கும் முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது ஒரு கோழைத் தனமான செயல்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### முச்சந்தி முரளி



தேர்தல் நெருங்க நெருங்க இப்படியான ஸ்ரண்ட்விளையாட்டுகள் எல்லாம் அதிகரிக்கும் போல!

## இன்றுடன் முடிவு

ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு முதலாவது குழுவில் சேவைமுன்பயிற்சி மேற்கொண்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வேலைகள் இன்றுடன் முடிவடைய உள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் குறிப்பிட்ட தொகுதிவாரியாக வழங்கப்பட்டுவந்த கடிதங்களைப் பெறத் தவறியவர்களுக்கான கடிதங்கள் நேற்றுவழங்கப்பட்டன அப்படியிருந்தும் பலரும் இன்னும் கடிதங்களைப் பெறவில்லை. அப்படித் தவறியவர்களுக்கு இன்றே கடைசிச் சந்தர்ப்பம் ஆகும் இனிமேலும் காலஅவகாசம் வழங்கப்பட மாட்டாது.

இவ்வாறு யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார் (ஒ-9)

## ஓய்வூதிய ரசீதுகள் புதனன்று கிடைக்கும்

யாழ்ப்பாணம், அக் 23

செப்டெம்பர் - அக்டோபர் மாதங்களுக்குரிய ஓய்வூதிய ரசீதுகள் புதன்கிழமை சகல ஓய்வூதியர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தபால் சேவை சீராக நடைபெறின் சகல ஓய்வூதியர்களுக்குமான ரசீதுகள்புதன்கிழமையன்று கிடைக்கும் என செயலக உயரதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்

இதேவேளை நவம்பர் மாத ஓய்வூதியம் வழமை போல் மாத இறுதியில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார் (ஒ-10)

### பூஸாக் கைதிகளின்

## உண்ணாவிரதம்தொடர்பாக ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 8

பூஸா தடுப்பு முகாம் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதம் தொடர்பாக ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:

கடந்த 30 09-88 முதல் உண்ணாவிரதம் இருந்துவரும் தண்டிக்கப்பட்ட அரசியற்கைதிகள் 17-10-88 முதல் நீராகாரமும் இன்றி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடருகின்றனர். இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய நம்பிக்கை சிறையில் உள்ள இளைஞர்களைப் பொறுத்த வரையில் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது கசப்பானதும், வேதனை தருவதுமான உண்மையாகும்.

ஈழப் போராட்டத்தில் ஏதோ ஒருவகையில் பங்களிப்புச் செய்தவர்களான இவர்கள் இன்னமும் சிறையில் வாடுவது அநீதியானதாகும். இவர்களின் விடுதலை தொடர்பாக, கடந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

23 - 10 - 1988
ஐப்பசி - 07
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:-
09-02முதல் 10 32வரை
ராகுகாலம்:-
04-03முதல் 06-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சிறிமாவுக்கு மிரட்டல் கடிதங்கள்!

கொழும்பு, அக் 23

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவோடு இரகசிய ஒப்பந்தம் ஒன்றை அவர் செய்து கொண்டிருப்பதாக இக் கடிதங்களில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாம்

ஜே வி. பியினரே இம் மிரட்டல் கடிதங்களை எழுதியிருக்கலாம் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

நேற்று முன்தினம் ஊவா மாகாணத்தில் நடந்த சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக கூட்டத்தில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிய வருகிறது. (ஒ-எ)

## இணைப்பு தற்காலிகம் என்றே கூறப்பட்டுள்ளது

### என்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர்

பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்தில வடக்கு- கிழக்கு இணைப்பை நிரந்தரமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் அது தற்காலிகம் என்றே கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகலவத்தையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (ஒ-எ)

### தெரிவாகியுள்ள 102

## விஞ்ஞான பட்டதாரி— ஆரம்ப ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், அக் 23

ஆரம்ப ஆசிரியர்கள் 42 பேரினதும், விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் 60 பேரினதும் தெரிவுப் பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவினால் யாழ் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இவர்களில் யாழ் மாவட்டத்துக்கு 17 பேரும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 54 பேரும், வவுனியாவுக்கு 2 பேரும், முல்லைத்தீவுக்கு 7 பேரும், புத்தளத்துக்கு 3 பேரும், மன்னருக்கு 19 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் நவம்பர் முதல் வாரம் ஆரம்பிக்கப்படஉள்ளன.

தெரிவு செய்யப்பட்டோரின் பெயர், விவரம் வருமாறு:-

கிளிநொச்சி

பீ. பாலச்சந்திரன் (வட்டு கிழக்கு), என்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவுக்கும் மதவாச்சிக்கும் இடையில்

## சிங்களவர்கள் வீதிமறிப்பு!

### வடபகுதி போக்குவரத்து தாமதம்!!

வவுனியா, அக். 23

பூனாவை, மகாகோங்கஸ்கட கிராமத்தை அண்டிய சிங்கள மக்கள் சுமார் 100 பேர் வரையில் வெள்ளிக் கிழமை வீதிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதனால் சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வடபகுதியில் இருந்துதென்பகுதிநோக்கிச் சென்ற வாகனங்களும், கொழும்பு அனுராதபுரம் பகுதிகளிலிருந்து வவுனியா— யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற நூற்றுக் கணக்கான வாகனங்களும் தாமதத்திற்குள்ளாகின.

இச்சம்பவம் வவுனியாவிலிருந்து மதவாச்சி செல்லும் திசையில் ஆறு மைல் தூரத்திலுள்ள மகாகும்புக்கெல்ல என்னும் இடத்தில் நடைபெற்றது.

தமது கிராமங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அதற்காகத் துப்பாக்கிகள் வழங்கப்படவேண்டும் எனக் கோரியே இந்த வீதிமறிப்புப் போராட்டம் நடைபெற்றது.

அவ்விடத்துக்கு விரைந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வீதிமறிப்புக் காரணமாக அசம்பாவிதங்கள் எதுவும் நேராமல காவல்இருந்தார்கள்.

வவுனியாவிலிருந்து விரைந்த இந்திய அமைதிப்படையினர் நிலைமையை அறிந்து வந்ததுடன் மூன்றுமுறிப்பு தடைமுகாமுக்கு அப்பால் தென்பகுதிநோக்கி வாகனங்களைச் செல்லவிடாமல் சில வாகனங்களைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள்.

பிற்பகல் சுமார் 2மணி அளவில் மதவாச்சியிலிருந்து வந்த பொலீஸ் அதிகாரிகள் இக்கிராமத்தவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்ததைத் தொடர்ந்து காவல்இருந்த வாகனங்கள் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன. (ஒ-164)

## பிரதான வீதியில் நேற்றும் இளைஞர்கொலை

குருநகர், அக், 23

யாழ் பிரதான வீதி திருக்குடும்ப கன்னியர் மடத்தின் முன்பாக நேற்று மாலையும் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்-மடம் வீதியைச் சேர்ந்த செல்லையா கிளேட்டன் (வயது 24) என்பவரே கொலையுண்டவராவார். (ஒ-51)

## இணுவிலில்

இணுவில் வைத்திய சாலைக்குச் சமீபமாக நேற்று நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

## ஜே. ஆர். - டிக்ஷிற் சந்தித்துப் பேச்சு

கொழும்பு அக். 23

கொழும்பிலுள்ள இந்தியத்தூதர் ஜே என். டிக்ஷிற் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி, வெளியுறவு அமைச்சர் பி வி. நரசிம்மராவ் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்கள்பற்றிய விவரங்களை திரு. டிக்ஷிற் அப்போது திரு. ஜெயவர்த்தனவுக்கு விவரித்தார். (ஒ-எ)

## ரயில் நேற்று யாழ் வந்தது

யாழ்ப்பாணம், அக் 23

வார இறுதிப் பயணிகள் ரயில் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது

கடந்த வாரம் தென் இலங்கையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக பிரஸ்தாப ரயில் சேவையில் ஈடுபடவில்லை

போதிய அளவு முன்னறிவித்தல் இல்லாமையினால் நேற்றைய ரயிலில் குறைந்த அளவு பிரயாணிகளே பயணத்தை மேற்கொண்டனர். (ஒ-5)

## குருநாகலில் மோதல்

கொழும்பு அக் 23

குருநாகலில் நேற்றுத் தீவிரவாதிகளுக்கும், பொலீஸாருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில்தீவிரவாதி ஒருவர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

அரசு ஆதரவாளர் ஒருவரைச் சந்தேகநபர்கள் சுட்டுக்கொன்ற சம்பவம் ஒன்றைத் தொடர்ந்தே இந்த மோதல் ஏற்பட்டது. (ஒ-எ)

## சிறைச்சாலை சுப்பிரின்டன்ட் சுட்டுக்கொலை

கொழும்பு, அக், 23

கண்டி சிறைச்சாலை சுப்ரின்டன்டன்ட் டிசொய்சா இனந்தெரியாதவர்களால் நேற்றுக் கண்டியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். (ஒ-ஐ)

### சண்டிலிப்பாயில்

## இளைஞன் பலி; பெண் காயம்

யாழ்ப்பாணம் அக் 23

சண்டிலிப்பாய்ப் பகுதியில் நேற்று நடந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார் இன்னொரு பெண் காயமடைந்தார்.

காயமடைந்த பெண்ணான நகுலேஸ்வரி கந்தையா (15 வயது) ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த இடத்தை நேற்று மாலை இந்திய அமைதிப்படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொண்டனர்.

(ஒ-10-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும். இன்றைய நாளி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இலங்கை அரசியல் மாற்றங்கள் இங்கும் தாக்கங்களை ஏற்படுத்தும்

## யாழ். பல்கலைக்கழக அஞ்சலிக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம் அக்-23
தென் இலங்கையில் கிளர்ச்சிகள் அதிகரித்து வருகின்றன. தற்போதைய அரசியல் போக்கினை எவராலும் கணிப்பிடமுடியாத நிலை ஒன்று தோன்றியுள்ளது. தென் இலங்கையின் அரசியல் மாற்றங்கள் எமது பிரதேசத்திலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும்.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

கடந்தவருட அக்டோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று கைலாசபதி கலையரங்கில் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் உரைநிகழ்த்தினார்.

அவர் மேலும்பேசுகையில் "நாளாந்தம் பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கைதுசெய்யப்படுகின்றார்கள். சராசரி இரண்டு பேர் கொல்லப்படுகின்றார்கள். இந்நிலை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது

"கடந்த வருடம் மரணமடைந்த மாணவர்களை நாம் நினைவுகூருவதற்கு அவர்கள் பெயரில் புலமைப்பரிசில் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்" என்றார்.

பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உரைநிகழ்த்துகையில்:

"தென் இலங்கை பல்கலைக்கழக மாணவ அமைப்புக்களும் எமக்கும் இடையில் தொடர்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

"மேலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுடனும் எமது பகுதிப் பாடசாலைகளுடனும் நிலையான தொடர்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படிஏற்படுத்தப்பட்டால் தான் எமது போராட்டங்களை விரிவு படுத்த முடியும்" என்றார்.

(இ- ...)

## அமைதிப்படை விசாரிக்கிறது

புதுடில்லி, அக். 23
சாவகச்சேரியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்று தொடர்பாக இந்திய அமைதிப்படை பூரண விசாரணைஒன்றை நடத்துகின்றது.

இத்தகவலை புதுடில்லியில் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-எ)

## சனசமூக நிலைய சமாச பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம். அக் 23
யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசங்களின் பொதுக் கூட்டம் நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் யாழ். புனித மரியாள் வித்தியாதயத்தில் நடைபெறும்.

(இ-எ)


**வாடிக்கையாளரின் கவனத்திற்கு**

எங்களிடம் திருத்துவதற்கு கொடுத்த மணிக்கூடுகளைக் கொடுத்த தவணையிலிருந்து பத்து நாட்களில் எடுக்கத் தவறின் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல என்பதை வாடிக்கையாளர்களுக்கு மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சில்வா வார்ச் வேக்ஸ்**

10, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(7662


## இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதியாக ஜேர்மனி செல்கிறார்

### கல்விப் பணிப்பாளருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், அக் 23
"வடமாநிலத்தில் ஆரம்பத்திலிருந்தே முறைசாராக் கல்விநெறி சிறப்பாக கல்லூரிகளில் ஒழுங்குற நடைபெறுவதற்கு எமது கல்விப் பணிப்பாளர் ஆற்றும் சேவை அளப்பரியது. அவர் முறைசாரா தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கு செய்த அரும்பணியை கருத்தில் கொண்டு இன்று இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதியாக ஜெர்மனியில் நடைபெறும் முறைசாரா தொழில் நுட்பக் கல்வி கருத்தரங்கு மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளார். இதனைத் தமிழ் மக்கள் பெரும் உவகையோடு வரவேற்கின்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில் நடைபெறும் மாணவர் மன்றக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். வி. மகேசவேல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது, எமது கல்லூரியில் ஓர் சிறந்த முறைசாரா கல்விப் பிரிவு உருவாகுவதற்கு எமது கல்விப் பணிப்பாளர் மூல காரணமாக இருந்தவர். அவரின் ஜெர்மனியின் பயணம் எம் போன்ற கல்லூரிகளுக்கு கூடிய வசதிகளை ஏற்படுத்துவதற்கு மேலும் வாய்ப்பினைத் தரும்".

இப்படி அவர் கூறினார். (ச)

## நெடுந்தீவுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

நெடுந்தீவு அக் 23
நெடுந்தீவில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, சீனி, பருப்பு போன்ற உணவுப் பொருட்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் விரைவில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பொருட்களை நெடுந்தீவுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

(ச-111)

## இலங்கை வங்கி வாணிவிழா

யாழ்ப்பாணம் அக் 23
ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் கடந்த செவ்வாய்க்கிழமை வாணிவிழா மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது.

விழாவுக்கான ஏற்பாடுகளை இலங்கை வங்கி நலன்புரி உத்தியோகத்தர் திரு. க. மங்களமூர்த்தி மேற்கொண்டிருந்தார்.

வங்கி ஊழியர்களுடன் வங்கி வாடிக்கையாளர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள். வங்கி ஊழியர் திரு. இ. சுதாகரின் பக்திப் பாடல் நிகழ்ச்சியும் விழாவில் இடம் பெற்றது.

(இ-5)

## ஆசிரியரிடமிருந்துமாணவர் சிறந்த பண்புகளைப் பெறுகின்றனர்

பருத்தித்துறை, அக்23
"ஆசிரியர்களிடமிருந்தே மாணவர்கள் சிறந்த மனிதப்பண்புகளையும், வாழ்க்கைக்கு வேண்டிய சகலபின்னணிகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆசிரியர் கல்வி கற்பிக்கும் நேரத்தில் மாணவர்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளையும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

யாழ்மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சங்கத்தின் காப்பாளரான அருட்திரு கிருபாகரன் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்.

கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்திரு ஜெரோ செல்வநாயகம் அடிகளார் பேசுகையில் முறைசாராக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

இக்கூட்டம் பருத்தித்துறை புனித தோமையார் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் புலோலி தெற்கு புற்றளை மகாவித்தியாலய அதிபர் திரு ஈ. யோகசுவா தலைமையில் நடைபெற்றது.

(இ-112)

## மின்சாரம் சீர்கேடு

பருத்தித்துறை அக்- 23
துன்னாலை, கலிகை, யாக்கரு பகுதிகளில் சட்ட விரோத மின் பாவனையால் மின்சாரம் சீராக வழங்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

இதனை உடன் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுன்னாகம் மின் முகாமையை துன்னாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு மு. சிறிஸ்கந்தராசா கேட்டுள்ளார்.

(இ-118)


# கண்ணீர் அஞ்சலி



அமரர்
மாண்புமிகு க. சிவானந்தசுந்தரம்
(தலைவர், தமிழீழ மக்கள் மன்றம்)

மாண்புமிகு க. சிவஞானசுந்தரம், 21 - 10 - 88 இல் அரியாலையில் நடைபெற்ற லெப். கேர்ணல் சந்தோசம் அவர்களின் ஓராண்டு நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் மாணவர்களுடனும், பொதுமக்களுடனும் சேர்ந்து திரும்பி வரும் வழியில் உடுப்பிட்டி வல்லை இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து படுகொலை செய்யப்பட்டார் என்பதை வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தமிழினத்தின் விடிவுக்காக, எமது தேவைகளை இந்தியாவுக்கும் உலக அரங்கிலும் எடுத்துக்காட்டிக் கொண்டிருந்த ஒளிவிளக்கு திரு. க. சிவானந்தசுந்தரம் அவர்கள் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அன்னாரின் பூதவுடல் 24 - 10 - 88 திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு வல்வெட்டித்துறையிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு வடக்கு, கிழக்கில் உள்ள சகல அமைப்புகளைச் சேர்ந்த மக்கள் அனைவரையும் வல்வை திருவில் புனித திடலுக்கு அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழீழ மக்கள் மன்றம்,
மாணவர் ஒருங்கிணைப்புக் குழு,
பிரஜைகள் குழுக்கள்,
ஒருங்கிணைப்பு கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு,
வாத்தகர் சங்கம்,
தனியார் மினிபஸ் போக்குவரத்துச் சங்கம்.



யாழ்.
**குணம் வீடியோ சென்ரரின் ஆதரவுடன்**
பின்வரும மினிசினிமாக்களில் மட்டும்

ரஜனிகாந்த் நடித்த
**"BLOOD STONE"**
(பெரும் பொருட் செலவுடன் தயாரிக்கப்பட்ட படம்)

(1) லிபர்ட்டி மினி (யாழ்ப்பாணம்)
(2) ஷோபா மினி (யாழ்ப்பாணம்)
(3) தாரணி மினி (சுன்னாகம்)
(4) லிங்கோர்மினி (சுன்னாகம்)
(5) ராஜநாயகி மினி (K K S.)
(6) யாழ் மினி (K. K S.)
(7) முருகன் மினி (கொக்குவில்)
(8) சுபாஷினி மினி (புத்தூர்)
(9) ராஜ் மினி (கிளிநொச்சி)
(10) செல்வா மினி (தெல்லிப்பழை)

**குணம் வீடியோ சேன்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/66 1)



## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சோதிவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனான வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K. அரியராசா நாவற்குழி கிழக்கு (மகாவித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு K அரியராசா, 302, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (7361)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, Hall set மேசை, Show-case Type-writter கண்ணாடி மேசை Black & Decker Drill Pram Stainless Steel Zink சட்டில், மெத்தைகள் Pressure Cooker மற்றும் பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 122, சிவன்கோயில்வீதி, திருநெல்வேலி தெற்கு. (7371)

சுத்தமான பொமனேறியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்;- இராசேந்திரம் நியூ பார்மஸி அருகில் ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். (7398)

தேக்குத் தளபாடங்கள் உட்பட சில வீட்டுத் தளபாடங்களும், வேறு பொருட்களும் உடனடி விற்பனைக்கு உண்டு தொடர்பு: 26, பறாடி ஒழுங்கை, அரியாலை. (7399)

சொந்தப் பாவிப்பில் உள்ள Reconditioned மோட்டார் சைக்கிள் (C 50 4 Cycle - Economical Power), விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: விஜயா ஸ்ரோஸ். 25 ஆடியபாதம் வீதி, நல்லூர் மாக்ஸற் அல்லது 23 செங்குந்தா வீதி, நல்லூர். (7395)

ரியூட்டரிக்கும் மற்றும் பாவனைக்கும் உரிய வாங்கு மேசைகள் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு A சனகசிங்கம் 210 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (C/655)

### வீடியோ,கமெராக்கள் டெக்குகள் விற்பனை

J. V. C (GXN 70 E) Sony National Gl, வீடியோ, கமெராக்கள், National NV 100 Orion [Portable] வீடியோ, டெக்குகள், Yachica FX 7 கமெரா, உடன் விற்பனைக்குண்டு. Hero Recording Bar Nelliady. (7234]

### மலிவு விறபனை

தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் கொடுக்கப்படும். இடம்: பேள் உலோகத் தொழிற்சாலை காலம், 21 - 10 - 88 தொடக்கம் 25 - 10 - 88 வரை. (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் ) (7232)

### FOR SALE

Supper Power National Stereo Double Cassette Receiver SG 320W, 320 Watts Contact; P. Naganathan, College Lane, Vaddukoddai. (7219)

### வகுப்புகள்

**A/L இரசாயனம்**
108 Brown Road A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (24 10-88) திங்கள் 6. 30 am (திங்கள், புதன், வெள்ளி 6.30 am) (7238

### விற்பனைக்கு

வீமன்காமத்தில் மாந்திட்டி எனப்படும் 6 பரப்பு சொரியல் காணி விற்பனைக்குண்டு. இரண்டு பக்கம் ஒழுங்கையுண்டு மின்சார வசதியுண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A.S Bastian ஸ்ரேசன் ரோட் மாவிட்டபுரம். (7246)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்திதழ்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல் களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜுவல்லரி, 146, நவீன சந்தை யாழ்ப்பாணம், (C 357)

### தேவை

கொம்போஷிங் செய்யக்கூடியவர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தரன் ஸ்ருடியோ, 9, 8 நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன் 23858 (7236)

பிளேட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும் செட்டியார் அச்சகம், இல 430 காங்கேசன்துறை வீதி,யாழ்ப்பாணம். (C/ 617 )

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 6 ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் பாடக் கைநூல் வெளிவந்து விட்டது. யாழ் மாவட்டத்தின் முன்னணிப் புத்தகசாலைகளில் கிடைக்கும் ஆக்கியோன்; ஆ. ந. இராசேந்திரன் விலை ரூபா 40/- (7302)

### A/L இரசாயனம்

108. Brown Road, A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 23 - 10 - 88 ஞாயிறு 3 15 p m சனி ஞாயிறு 3 . 15 to 5. 45 p . m 3 . 15 to 4 15 p. m பௌதிக இரசாயனம் 4 15 to 5. 45 p. m பொது இரசாயனம், சேதன இரசாயனம். (7230)

### ஜோதிடம்

05 - 11 - 88 இல் சனி மாற்றம். விலை ரூபா 3/50 எங்கும் கிடைக்கும். தமிழர்களின் இராசி- மேடத்திற்கு அட்டமத்து சனியால் மறுமலர்ச்சியும், தென்னிலங்கை ராசி- கும்பத்திற்கு வன்முறைகள் அதிகரிப்பும் ஏற்படும் சத்தியதாஸன், (ஆம ஜோதி நூலாசிரியர்) காங்கேசன் துறை (7216)

### தமிழ்மூலம் ஆங்கிலம்

பிறர் உதவியின்றி மிக இலகுவில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க உறுதுணையான நூல் Spoken English & Grammar. ஆசிரியர் N M C. V. Thasan. ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (7242)

### கோழிக்குஞ்சு

**விநியோகம்**

Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சிவப்புசேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், ஆண் குஞ்சுகள், விருந்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர் (6882)


### தவறிவிட்டது

4 ஆம் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரிக்கும் நல்லூர் கோவிலுக்கும் இடையில் பருத்தித் துறை வீதியில் எனது மூக்குக் கண்ணாடி 21 - 10 - 88 அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர் 61, மருதடி வீதி, யாழ்ப்பாணம் அல்லது ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூரில் ஒப்படைக்கவும். (7392)

தேவகிராணி இரத்தினசபாபதி ஆகிய எனது அடையாள அட்டை இல. 528462146X, இ.போ.ச அடையாள அட்டை இல 0057 இரண்டும் நாவற்குழிக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இ. போ. ச கோண்டாவில் டிப்போவுக்கு அல்லது அரசவீதி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய் என்ற விலாசத்திற்கோ தெரிவிக்கவும் (7402)

டாக்டர் ந. சத்தியமூர்த்தி என்பவரின் அடையாள அட்டை இல. 4835902 V 20 - 10 88 காங்கேசன் துறையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் காங்கேசன் வைத்தியசாலை, மாக்கற் றோட், காங்கேசன்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7396)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் ''சமூகக் கடன் வழங்குதல்'' திட்டம் ஊர்காவற்றுறையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

படத்தில் ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு பி.ஏ. அருமைநாயகம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார்.

அருகில் யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு கே. கணேசமூர்த்தி, இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் திரு மு. கனகரத்தினம் ஆகியோர் காணப்படுகின்றனர். (இ-10)

தலைமன்னாரில்

# எய்ட்ஸ் நோய் சோதனை நிலையம் நிறுவும் திட்டம் நிறுத்தம்

கொழும்பு, அக் 23

தலைமன்னாரில் எய்ட்ஸ் நோய் சோதனை நிலையம் ஒன்றை நிறுவுவது உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலையீட்டினால் நிறுத்தப்பட்டிருப்பதாக 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது.

இலங்கை திரும்பிய நான்கு பெண் அகதிகளுக்கு எய்ட்ஸ் பிடித்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்படும் செய்தியைத் தொடர்ந்து தலைமன்னார் இறங்கு துறையில் எய்ட்ஸ் சோதனை நிலையம் ஒன்றையமைக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

அப்படி நிறுவுவது மனித உரிமை மீறல் செயலாக விளக்கம் கொடுக்கப்படலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அபிப்பிராயம் தெரிவித்தது என்றும்-

ஏனையோரிடமிருந்து அகதிகளைப் பிரிவுபடுத்தி பார்க்கக் கூடாது என்று கூறப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது.

எய்ட்ஸ் பரிசோதனைக்கு எவரையும் கட்டாயப் படுத்தக் கூடாது என்றும் தானாக விரும்பி வந்து ஒருவர் சோதனைக்கு உடபடுத்த வேண்டும் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்திருப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக சுகாதார ஸ்தாபனம் எடுத்த முடிவுக்கு எதிராக அதிகாரிகள் செயற்படப்போவதில்லை என்று அமைச்சின் இன்னொரு வட்டாரம் தெரிவித்தது.

மேகநோய்த் தடுப்பு இயக்க இயக்குநர் டாக்டர் காமினி ஜயகுரு, இது குறித்து தற்போதைக்கு கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை''-என்று தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனப் பிரதிநிதியும் இவ்விஷயம் குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். (இ-எ)

## தென்மராட்சியில்

கொடிகாமம். அக். 23

தென்மராட்சியில் பாடசாலைகள் அனைத்தும் 18ஆம் திகதி புதன் கிழமை முதல் இயங்கி வருகின்றன.

புதன்கிழமை அனேக பாடசாலைகளில் விசேஷ நவராத்திரிக் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. (ச-75)

## வாசுதேவா போட்டியிடுவார்

ஜனாதிபதித்தேர்தலில் நவசமசமாஜக் கட்சியின் சார்பில் திரு வாசுதேவ நாணயக்காரா போட்டியிடவிருக்கிறார்.

ஐக்கிய சோஷலிச அணியைச் சேர்ந்த திரு. ஒஸி அபேயகுணசேகரா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாத பட்சத்தில்தாம் போட்டியிடப் போவதாக திரு. வாசுதேவ நாணயக்காரா நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார். (உ-ஐ)

தெற்கில் குழப்பம் என்றால் வடக்கில் ஏன் பாடசாலைகளை மூடவேண்டும்

# தமிழ் பகுதியில் கல்வியை குழப்ப ஸ்ரீலங்கா அரசு நயவஞ்சகம்

## மாணவர் இளைஞர்பொது மன்றம் அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 23

கடந்த காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது தமிழ் மாணவர் கல்வி நிலையும், கல்வி நிலையங்களும் சீரழிந்த போதும் விடாமுயற்சியுடன் படித்து ஈழமண்ணில் கல்வி நிலை செழிக்கச் செய்தனர் மாணவர்.

ஆனால் தற்பொழுது தென்னிலங்கை மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் மூடி உள்ளது அரசு.

இந்த நடவடிக்கை மூலம் தென்னிலங்கை மாணவர்களுடன் தமிழ் மாணவர்கள் கல்வியும் பாதிக்கப்படட்டும் என வஞ்சகமாகத் திட்டமிட்டு செயற்படுகிறது ஸ்ரீலங்கா அரசு.

எனவே இந்தச் சதியை முறியடிக்க வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை வழமைபோல் இயங்கச் செய்ய அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஈழப்புரட்சி அமைப்பின் மாணவர் அணியன மாணவர் இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பகுதியில் நடைபெற்று வரும் மாணவ இளைஞர்களின் ஆர்ப்பாட்டத்தினால் ஸ்ரீலங்கா அரசின் ஆட்சி தளம்பிக் கொண்டிருக்கிறது. மாணவ இளைஞர்களின் எழுச்சியை அடக்க முடியாத அரசு பாசிச செயல்களைப் புரிந்த வண்ணம் உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தால் அரசும், கல்வி அமைச்சும் தங்கள் சுயநல பதவி மோகத்துக்காக தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக சகல பாடசாலைகளையும் காலவரையறையின்றி மூடியது பின்னர் 25ஆம் திகதி மீண்டும் திறக்க அறிவித்துள்ளது.

தென்னிலங்கை மாணவர்களின் கிளர்ச்சியான படியால் அதனை அடக்க முடியாமலும் தீர்வுகாண முயலாததாலுமே பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

கிளர்ச்சி நடைபெறும் பிரதேசங்களுக்கு அப்பாற்பட்ட இடங்களிலும் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

'ஜனநாயக உரிமை பேணும் நாடு'' என்று சர்வதேசத்தில் முலாம் பூசிக் கொள்ளும் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கல்வித் தடைக்கும்-

தென்னிலங்கை மாணவர்களின் போராட்டத்திற்கான கோரிக்கைகள் சிலவற்றுக்கு நாமும் ஆதரவளிப்பதினால் இப்படியான பாடசாலைகளைமூடிவிடும் நிகழ்வுகளுக்கும் எமது எதிர்ப்பை தெரிவிப்போமாக.

அத்துடன் வடக்கு கிழக்கு மலையக தமிழ் பாடசாலைகள் அனைத்தையும் வழமை போல் இயங்கச் செய்ய மாணவர், ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரும் ஒத்துழைப்பார்களாக.

இது விடயத்தில் அனைத்து மாணவர் அமைப்புக்களும் ஆசிரியர் சங்கங்களும், அதிபர் ஒன்றியங்களும், பொதுநல அமைப்புகளும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# அச்சகம் சீல் வைப்புக்கு சுதந்திரக்கட்சி ஆட்சேபம்

கொழும்பு அக்

கொட்டாஞ்சேனையில் உள்ள அச்சகம் ஒன்றை பொலிஸார் சீல் வைத்து மூடியதை ஆட்சேபித்து சுதந்திரக் கட்சி, பொலீஸ் மா அதிபருக்கு முறைப்பாடு அனுப்பி இருக்கிறது.

கட்சியின் சார்பில் டாக்டர் மக்கிரத்வத்தை இம் முறைப்பாட்டைச் செய்திருக்கிறார்.

முறைப்பாடு வருமாறு;

14. 10. 1988 இல் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவினரும் பொலீஸாரும் சட்டவிரோதமாக யூனைட்டட் மேர்ச்சன்ட்ஸ் பிரிண்டர்ஸ் அச்சகத்தினுள் நுழைந்து, சுதந்திரக் கட்சிக்குரிய பிரசாரதஸ்தாவேஜுகளை அகற்றிச் சென்றனர். அச்சகத்தையும் மூடி சீல் வைத்தனர்.

சுதந்திரக் கட்சி தேர்தல் செயலக ஊழியரையும் அவர்கள் துன்புறுத்தி வருகின்றனர். கட்சியின் தேர்தல் பிரிவைக் குழப்பவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடத்தப்படும் என்ற பிரதமரின் உறுதி மொழிக்கு முரணாக இது இருக்கிறது.

மூடப்பட்ட அச்சகத்தைத் திறக்கவும் சுதந்திரக் கட்சித்தேர்தல் செயலக ஊழியர்களைத் துன்புறுத்துவதை நிறுத்தவும் உடன் நடவடிக்கை எடுங்கள்.

இப்படி முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-எ)

# சமய போதனை செய்பவர்கள் ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும்

சுழிபுரம், அக்.23

இளையவர்களுக்கு சமய போதனை செய்பவர்கள் ஒழுக்கசீலர்களாகவும், உண்மை. நேர்மை யுடைவர்களாகவும் அறிவாளிகளாகவும் விளங்கவேண்டும்

அப்போது தான் இளையவர்கள் உள்ளங்களில் நல்ல விதைகளை விதைக்கவும், வளர்க்கவும் முடியும்.

மனச்சாட்சிக்கு மாறாக நடக்காது, உண்மை வழி நின்று வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

பண்ணும் தெற்கு ஸ்ரீ முருகன் சன சமூக சேவா சங்க வாலிபர் சங்கத்தினர் வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வழக்கம்பரை பஜனைச் செயலாளர் திரு.க வாமதேவன் மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத் தலைவர் வெ, கலையழகன் தலைமையில் விழா நடைபெற்றது.

இவ் கலைமகள் விழாவை பண்ணாகம் இளம் விவசாயிகள் கழகத்தினர் நடாத்தினர் (ச)


## சோலைவரி அறிவித்தல்

### 3ஆம் கந்தாயம் 1988

1988 ஆம் ஆண்டு 3 ஆம் கந்தாயத்திற்கான விதவரிஅறவீடு 30-9-88 இல்முடிவடைந்தது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு குறிப்பிட்ட கந்தாயத்திற்குரிய விதவரியைச் செலுத்தும் கால எல்லை 30-9-88 இல் இருந்து 31-10-88 வரை நீடிக்கப் பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதுவரை விதவரியைச் செலுத்தத் தவறியவர்கள் உடன் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் விதவரிக்கு கீழ் குறிப்பிட்டவாறு மேலதிகமாக வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

1. வெறுங் காணிகள் மற்றும் வதிவிடங்கள மீது - 15%
2. மற்றும் சகலஏனைய இடங்கள்மீது-20%

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்லத தவிர்க்கும் பொருட்டு முன் கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அப்படியாக அனுப்பப்படும் போது வரியிறுபாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம், 14-10-88.

(C 411)


# பாடும் பணிமூலம்; பரமனை அடைய முயலுங்கள்

## ஆத்மஜோதி முத்தையா உரை

மானிப்பாய், அக் 23

வீடுகளில் திருமுறைகளை ஒலிக்கச் செய்யுங்கள்; கோவில்களில் கூட்டுப் பிரார்த்தனைகளை வளர்க்கச் செய்யுங்கள். பாடும் பணி மூலம் பரமனை அடைய முயலுங்கள்.

வலி-தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆறு நாட்கள் இடம் பெற்ற திருத்தல யாத்திரையை முடித்துக்கொண்ட ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா இவ்வாறு இறைவில் பரராசசேகரபிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. மகாலிங்கம் தனது தலைமை உரையில் 'சிவனடியாரைக் காண இக் கிராம மக்கள் மணிக்கணக்கில் காத்திருந்த காட்சி 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நாயன்மார்களைச் காண மக்கள் முன் வந்த நிகழ்வை நினைவு படுத்துகிறது என்கிறார்.

சிவநெறிச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் ''உடுவில் உதவி அரச அதிபரின் சைவப் பணியை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய ஏனைய உதவி அரச அதிபர்களும் தத்தம் பகுதிகளில் ஸ்தல யாத்திரைக் கானஏற்பாடுகளைசெய்து கொடுக்க வேண்டும என்றார்.

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா பேசுகையில் ''சமயத்துக்கென வெளியாகி வந்த ஆத்மஜோதி மீண்டும் ... வெளிவர ஆவன செய்ய வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் சார்பாக திரு. முத்தையாவுக்கு வாழ்த்து மடல் ஒன்றை பிரம்மஸ்ரீ நா. வீரமணி ஐயர் வாசித்து அளித்தார்.

திரு. முத்தையாவின் சமயப்பணியை பாராட்டி மில்க்வைற் தொழில் அதிபர் திரு க. கனகராசா அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

ஆறுநாட்களாகஸ்தல யாத்திரை மேற்கொண்ட அடியார்கள் சிலருக்கும்-பொன்னாடை போர்த்தப்பட்டது.

முன்னாள் யாழ்ப்பாண கல்விப்பணிபாளர் திரு தி. மாணிக்கவாசகர், கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம், திரு. சபா ஆனந்தர், பண்டிதர் நமசிவாயம், பண்டிதர் இரா. திருநாவுக்கரசு, திரு. வை. கதிர்காமன் (இளைப்பாறிய அதிபர்) உட்பட பலர் உரையாற்றினர்.

பாதயாத்திரை நிறைவையொட்டி அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (ச-90)

# தாதியர் பயிற்சி நெறி பெறுபேறு அடுத்தவாரத்தில்?

யாழ்ப்பாணம், அக் 23

தாதியர் பயிற்சி நெறிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கான பெறுபேறுகள் அடுத்த வாரம் அளவில் வெளியாகலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தப் பரீட்சை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

பரீட்சைக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து 212 பேர் மட்டுமே தோற்றி இருந்தனர்.

இரண்டு மாகாணங்களிலும் 285 பேருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. (I ஜ6-0-)

## கோரிக்கை

கொடிகாமம் துணை தபால் அதிபரை இடம் மாற்றம்செய்யவேண்டாமெனக் கொடிகாமம் மக்கள் குழு தபால்மா அதிபருக்கு ... ஒன்று அனுப்பி வைத்துள்ளது. (ச-75)


## பிரயாண ஒழுங்குகள்




சவூதி அரேபியா குவைத் மற்றும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு

(1) சவூதிஅரேபியா

லேபார்ஸ் 350 + 100
கிளீனேர்ஸ் 350 + 100
மீன் பிடிப்பாளர் 900 + 150
(குறிப்பு:- நல்ல அனுபவமுள்ள மீன்பிடிப்போர் 5 பேர் உடனடியாகத் தேவை)
உடன் தொடர்பு கொள்ளவும்

(2) கப்பலில் வேலைவாய்ப்பு

சம்பளம் 500 U. S. Dollar
உணவு வசதிகள் பிரத்தியேகம்
ஒப்பந்தம்: ஒரு வருடம்
குறிப்பு:
மேற்படி கப்பல் கனடா, அமெரிக்கா, இலண்டன், அவுஸ்திரேலியா மற்றும் நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

(3) குவைத்

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் 35 டினர்
வீதிச் சுத்திகரிப்பாளர்
[வயது 18 க்கு மேல்]

தொடர்பு:

கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்
புகையிரதநிலைய வீதி,
சுன்னாகம்.

குப்பிளான் வல்வெட்டி

(C 643)



## புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிரும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி வலோரிமரியம்மா

தோற்றம்: 10-02-1028 மறைவு: 23-09-1988

திதி: 23-10-1988

அன்னையே பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் நின்று, எம்மையெல்லாம் உருவாக்கிய உங்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

பிள்ளைகள்: வ. அசஸ்ரின் (சவூதி), வ. யோசப் யாழ்ப்பாணம்), வ. டானியல் (சவூதி), வ. பிரான்சிஸ் (ஜெர்மனி), வ. அன்ரன் (லிபியா), வ. எட்மன் (ஜெர்மனி), மகள் அந்தோனியாப்பிள்ளை

மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

பள்ளக்காடு,
மயிலிட்டி. (7333)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சு. கந்தையா

தோற்றம்: 30 07 1918 மறைவு: 03 11 - 1987

திதி: 23 - 10 - 1988

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எல்லோருக்கும் இனியவராய் பாரினில் யாவரும் போற்றிடும் பாங்குடன் வாழ்ந்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையத் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (7504)

## 4ஆம் ஆண்டு நினைவு தினம்



திரு. முத்துக்குமாரு சீவரத்தினம்

(முன்னாள் விளையாட்டு அதிகாரி, கரவெட்டி)

மலர்வு: 25.09.1931 உதிர்வு: 07.11-1984

அவரின் ஆத்மா சாந்தி
அடையப் பிரார்த்திக்கின்றேப்.

மனைவி, பிள்ளைகள்,
உற்ருர், உறவினர்கள்.

ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை.

(7363)


## வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (Job Categories உயர் தொழில் முதல் சிறுதொழில் வரை. 17 முதல் 50 வயது வரை ஆண்களும் பெண்களும் கட்டணம் எதுவுமில்லை. நீங்களே உங்கள் வெளிநாட்டு தொழில் அதிபருடன் நேரில் தொடர்பு கொண்டு உங்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக்கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25, முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

Foreign Assignments,
Chunnakam

(7520)


## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



மண்ணகம்: 13-11-1956

விண்ணகம்: 11-09-1988

அமரர்

### சிவனேஸ்வரராஜா (சிவநேசன்)

(யாழ்/ போதனு வைத்தியசாலை ஊழியர்)

அன்பின் திருவுருவே!
பாசமுள்ள கணவராகத் தந்தையாக
சகோதரராக வாழ்ந்தீரே!
கணப் பொழுதில் உமதுயிரை
எம்மை விட்டுப் பிரித்தெடுக்க
காலனவன் துணிந்தானே!
இறைவா! நீயும் இசைந்தாயோ!
தலைவா! துடிக்கின்றோம்
உன் நினைவால் வாடி நிற்கிறதே
உன் குடும்பம்.
நம்ப முடியவில்லை உன் மறைவை,
ஆனல் உணர்கின்றோம் - நீங்கள்
இல்லாது சோபை
இழந்து காணப்படும் எம்
இல்லத்தின் வெறுமையை.

உமது ஆத்மா சாந்தியடைய
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்

25-10-88இல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றும்படி உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, மற்றும் பிள்ளைகள்:
லோஜி, பிரியா, சண்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (7362)

## முதலாம் வருட நினைவஞ்சலி



திரு. முத்துத்தம்பி பரமலிங்கம்

(பாக்ரறி ஒபிசர்)

ஆண்டவன் படைப்பு 6 - 11 - 1937 அநியாய அழிப்பு 4 - 11 - 1987

திதி நாள் 23 10 88

அழுதிட மனமது மாறவில்லை அதை எழுதிடத் துடிக்கின்றோம் முடியவில்லை. நீர் எம்மை விட்டகன்று ஒரு வருடப் பொழுது சென்றிடினும் உம் நினைவுகள் எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும் உமது ஆத்மா சாந்திபெற அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள், தாய்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மாமன், மாமி, மைத்துன, மைத்துனிகள்
மற்றும் உற்ருர், உறவினர்.

கலட்டி லேன்,
சோண்டாவில் மேற்கு. (7522)


மணிக்குரல் ட்ரவல்ஸ்

## மணிக்குரல் வைசின் தர்மலிங்கம் துரிதகெதியில் ஒழுங்கு செய்யும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு

சவூதி அரேபியா
Age Over 21 years

| | |
|---|---|
| Cleaners | —350 SR |
| Civil Supervisor (Building) | —900 SR |
| Mason | —600 SR |
| Carpenter | —600 SR |
| Plumber | —600 SR |
| Wall Painter | —600 SR |
| Electrician | —600 SR |
| Driver | —600 SR |

Open Visa - Age over 25 years

| | |
|---|---|
| Generator Operator | —700 SR |
| Water pumb Mechanic | —800 SR |
| Water Pumb Electrician | —800 SR |
| 3. Galvanizor | —700 SR |
| 1 Fabricator | — 70 SR |

KUWAIT
Age over 20 years

| | |
|---|---|
| Cleaners | —30 KD |
| Drivers | —60 KD |

(with Gulf Driving Licence)

விரும்புவோர் பாஸ்போட்,
6 படங்களுடன் நேரில் சந்தியுங்கள்

"மணிக்குரல்"

அமுத மஹால்
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(7389)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வஸ்தியாபபிள்ளை அன்ரனி குறூஸ்

அன்னையின் மடியில் 9-8-1915
அநியாய அழிப்பில் 23 10-1987

அருமனையின் குல விளக்கே
எங்கள் வாழ்வில்
ஆனந்தக் கற்பகமே அனைத்துக் காத்த
பெருமகனே கருணை
யொளிப் பிழம்பே அன்பின்
பெட்டகமே ஆருயிரே பிறர் துன்பத்தில்
உருகி மனத்துயர்
தீர்க்கும் அருளின் ஊற்றே
உறவுகளின் பலமிழந்தோம்
எங்கே சென்றீர்?
கருமுகிலே கதிரவனை
மறைத்தால் இன்பக்
காட்சி தனைக் கண்
களிலினிக்காண்பதெப்போ?
பாழுங்கொடுமை செய்
பேயால் வந்துற்ற பங்கமெல்லாம்
சூழும் குருதியிற் தோய்த்தே
அபயம் மகர்க்களித்தோய்
நாளும் பணிந்துனை
வேண்டுதல் செய்த குடசருக்கு
வாழும் ஒளியினை
நல்கிடுமே மரி பாலகனே!

உங்கள் ஆத்மா சாந்திபெற
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்ருர்,
உறவினர், நண்பர்கள்.

13, 6ஆம் குறுக்கு வீதி
யாழ்ப்பாணம். (7387)

## புளத்சிங்கள எம்.பி. பதவி; சட்ட அதிகாரிகளின் பரிசீலனையில்

திரு. ரெனி டீமெல் மீண்டும் புளத்சிங்கள எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரச்சினை சட்ட அதிகாரிகளின் பரிசீலனைக்கு விடப்பட்டு இருப்பதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

புளத்சிங்கள தொகுதியின் புதிய எம்,பி. ரெனி டிமெல்லின் பதவிப் பிரமாணம் எப்போது என்பது பற்றி அத்தனகல்லை எம்.பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இதனைத் தெரிவித்தார். (ஒ-எ)

### களுதாவளையிலும் இளைஞர் கொலை

பூஸாவிலிருந்து விடுதலையான இளைஞரொருவர் இருவாரங்களால் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் களுதாவளையில் இடம்பெற்றது (ஒ-21)

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



சிவனடியார் கந்தவேல்

அன்னையின் மடியில்:- 10-5-1927
அநியாய அழிப்பு:- 23-10-1987

திதி:- 10-11-1988

ஈசனே எம் இல்லத்து இறைவனே! பாசமுடன் மனைவியையும் பற்றுடன் மக்களையும் பாதுகாத்து வந்தீரே!

நேசமுடன் அப்பா என்று உங்களை அழைக்க விடாது பாவிகள் தாம் உங்கள் உயிரைப் பதை பதைக்கத்பறித்தனரோ? நாம் நடந்து வந்த பாதையை பார்க்கின்றோம், அப்பா! அங்கே தெரிகின்றதே உங்கள் கருணை நிறைந்த திருமுகம்! ஆனல்இன்று அத்திரு முகத்தைப் பார்க்க முடியவில்லையே.

ஆண்டொன்று சென்றுவிட்டதே ஐயா; ஆறுவில்லையே எம்மனத்துயர்.

துன்பக்கடலில் சுழன்று கொண்டிருக்கும் எங்களைத் துடுப்புப்போல் வந்து காப்பாற்ற மாட்டீரோ?

ஏங்குகின்றோம் நாம், தீர்க்க மாட்டீரோ எம் இதய சோகத்தை!

உங்கள் ஆத்மாசாந்தி அடையப்பிரார்த்திக்கும்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்
மைத்துனர்கள்.

113, அத்தியடி,
யாழ்ப்பாணம். (7523)

## ஓராண்டு நினைவஞ்சலி



பொன்னம்பலம் இராமநாதன்

(இ. போ. ச. வவுனியா சாலை)

மலர்வு: 7-2-1950 உதிர்வு: 3-11-1987

திதி 23 10-88

அகதியாய், அடிபட்டு
அவதியுற்று வந்தோருக்கு உதவவென
அவசரமாய்ச் சென்றீர்களே! ஐயகோ!!
அமைதிக்கு வந்தவர்களின்
ஆகாயத் தாக்குதலில்
அநியாயமாய் அழித்தனரே உம் உயிரை
அன்று தம்பி சுரேந்திரனை இழந்து
ஆண்டு ஒன்று
அடைந்து ஐந்து மாதத்தினுள்
அண்ணு! உங்களையும் இழந்துவிட்டோம்
-உங்கள்
அன்பு மழலைகள் நால்வரும்
அப்பாவின் அன்பிற்காய் ஏங்குகின்றனரே!
-எங்கள்
அன்பின் உருவே! அழகின் திருவே-உங்கள்
அன்பான ஆத்ம சாந்திக்காய்
அரனை ஆராதிக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், பெற்ருேர்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மற்றும் குடும்பத்தினர்.

முல்லைத்தீவு வீதி,
நெடுங்கேணி. (7380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழக
(வெளிவாரி) மாணவர்களுக்கான
மீட்டல் வினுவிடை விரிவுரைகள்

## கலைமுதற் தேர்வு
## 1989 ஏப்ரல்

# "பொருளியல்"

ஆரம்பம்: 30-10-88 பி.ப 2 மணி

★ அனுபவம் வாய்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களினல் நடத்தப்படும்.
★ கடந்த 14 வருட வினக்களுக்கான விடைகள் வழங்கப்படும்.
★ அச்சிட்ட பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்.
★ ஆரம்பத்திலிருந்து விரிவுரைகளுக்குத் தோற்றுவது மாணவர்களுக்கு நன்மை தரும்

வரையறுத்த மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

( C/657 )


நாவற்குழி வீடமைப்புத் திட்டம்:

# அசம்பாவிதங்கள் காரணமாக
# ரூ. 80 லட்சம் சேதம்

யாழ்ப்பாணம், அக் 23

வடபகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக நாவற்குழியில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்துக்கு எண்பது லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ் மாவட்டக் கிளை இந்த மதிப்பீட்டைச் செய்திருக்கிறது.

பிரஸ்தாப மதிப்பீட்டு அறிக்கை புனர் நிர்மாணக்துறை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது

நாவற்குழியில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் நடுத்தர வர்க்கத்தினருக்காக அமைக்கப்பட்டது.

இதில் மொத்தம் 298 வீடுகள் கட்டப்பட்டன.

ஆறுகோடியே ஐம்பது லட்சம் ரூபா செலவில் இந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.


வடபகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களையடுத்து இந்தத் திட்டத்தில் 18 வீடுகள் முற்ருகச் சேதமடைந்திருக்கின்றன என்றும் மூன்று வீடுகள் 75 சதவீதம் சேதமடைந்திருப்பதாகவும், 60 வீடுகளிலிருந்து பல்வேறு பொருள்கள் பெயர்த்துஎடுக்கப்பட்டதாகவும், பதினேழு வீடுகளுக்குச் சிறிய அளவிலான திருத்தவேலைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் சம்பந்தப்பட்ட சேதஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (ஒ-ஐ)

## நெறியாளர்தெரிவு பொதுக் கூட்டம்

கொடிகாமம், அக் 23

கொடிகாமத்திலிருக்கும் தென்மராட்சி கிழக்கு ப நோ.கூ. சங்க நெறியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச் சபைப் பிரதிநிதிகளடங்கிய பொதுக்கூட்டம் நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும். (ச-75)

# முதலாண்டு நினைவஞ்சலி



## திரு. நேசராசா சிறிதரன்

**தாயின் மடியில்:** 1965-04-03
**இறைவனடியில்:** 1987-11-04

எம் இனிய அன்புத் தெய்வத்தைக் கண்டீர்களா?
சிறி ஐயா! நீர் எங்கே சென்றுவிட்டீர்?
எம் அணைந்த அன்புத் தெய்வமே! எம்
இதயத்தில் நீர் என்றும் அணையா தீபமே!
இருபத்திரண்டும் நிறையாத உம் காளைப்பருவம்
யமனைக் கவர்ந்து விட்டதோ
எங்கே ஐயா எமைத் தவிக்க விட்டுச் சென்ருய்?
தீராத துன்பம் எம்மனதில் அலைமோதுதையா!

வெள்ளைச் சீருடையுடன் பாடசாலைக்குப் போனீரே அன்று
கள்ளங்கபடமின்றி அன்பாகப் பழகுவீரே
ஆனல் இன்று எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கே சென்றுவிட்டீர்?
வாழும் வயதில் கொடிய நோய் பற்றியதே பொன்மேனியில்
அதைமாற்ற வெளியூர் சென்றீர் உமது அண்ணுவோடு
ஆனல் வெளியூரில் உமைக்காலன் கவர்ந்து விட்டானே
துடிக்குதையா எம் இதயம் இன்றும் அந்தோ!
கலங்குதையா எம் கண்கள் கண்ணீரால்!

எம்முடன் மிகவும் அன்பாகப் பழகிவிட்டு பாதியில்
எமைப் பரிதவிக்கவிட்டு விட்டுச் சென்று விட்டீரே
உம் இறுதிப் பயணத்தைக் கூட எம்மால் காணமுடியவில்லையே?
உம் பொன்னன திருமேனி இப்போ எங்கே ஐயா?
நீர் மறைந்து முடிந்த இந்த ஓராண்டை நினைக்கும்போது
எம் உள்ளம் எல்லாம் குமுறுதையா
உம் ஆத்ம சாந்திக்காக நாம் அனைவரும்
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்ருேம்.

24-10-88 காலை 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்ருர், உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்ருேம்.

க. நேசராசாவும்
மனைவி
நே. யோகேஸ்வரியும்

வண். வடமேற்கு
ஆனைக்கோட்டை.

(C/659)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் திரு. ஆறுமுகம் சந்தனராசா (ராசு)

அன்னையின் அளிப்பு: 04 - 05 - 1946
அநியாய அழிப்பு, 03 - 11 - 1987

திதி: 23. 10. 1988
(ஞாயிற்றுக்கிழமை)

ஆண்டொன்று மறைந்ததையா! உங்கள் அன்புருவம் மறையவில்லை, உங்கள் நினைவில்லா நாளில்லை. எம்துயர் ஆருதையா! அன்புத் தெய்வமே! என்றும் எங்கள் நினைவை விட்டகலா உங்கள் நினைவுகள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்ருேம்.

அன்பு மனைவி. பிள்ளைகள்
உற்ருர், உறவினர்கள்.

680, K. K. S வீதி.
யாழ்ப்பாணம்.

(7512)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



## திருமதி சுப்பிரமணியம்_ இராசமணி

மலர்வு: 25. 10. 1925
உதிர்வு: 23. 9. 1988

எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு அஞ்சலியும், அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் 23. 10 1988 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி முதல் அன்னரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்ருர், உறவினர், நண்பர்களை அன்னரின் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிருேம்.

சு. சண்முகானந்தம்
(பட்டயக்கணக்காளர்- பங்காளர் V.M பேரம்பலம் அன். கம்பனி)
சு. வாமதேவன்
பெண்பிள்ளைகளும்- மருமக்களும்
''உடுவில் ரோட்''
சங்குவேலி,
மானிப்பாய்.

(7614)


# பதவி வெற்றிடம்

## புங்குடுதீவு-நயினுதீவு ப. நோ. கூ. சங்கம்

### இலிகிதர்-தரம் III

கல்வித் தகைமைகள் :

1. தமிழ்மொழி, கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய க. பொ. த (சா. த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை : 18 — 30
3. சம்பளத்திட்டம் : 730 — 1055 / 20 × 10 — 25 × 5

### இளை முகாமையாளர்-தரம் III

கல்வித் தகைமைகள் :

1. தமிழ்மொழி, கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை : 23 — 40
3. சம்பளத்திட்டம் : 805 — 1260 / 25 × 7 — 35 × 8
4. பிணை : ரொக்கம் 2000/- ஆதனம் 3000/-
சங்கத் தொழில் பரப்பில் வசிக்கும் ஆண்பாலாருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி : 05 - 11 - 88

விண்ணப்பங்கள் 'பொது முகாமையாளர், புங்குடுதீவு - நயினுதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு' என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்

C/658



## உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்ருேம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்ருேம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

### கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கின்றேன்

● முக்கிய குறிப்பு:
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:
# S.P. ANTON
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 651)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆகிய கந்தையா நாகமணியின் அந்தியேட்டி 24 – 10 – 88 திங்கட்கிழமை கீரிமலையிலும், 26 – 10 – 88 புதன்கிழமை வீட்டுக்கிரியைகள் புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தில் உள்ள ரூபமஹாலிலும் நடைபெறும்.

உற்றார் உறவினர் நண்பர்களை அழைக்கின்றோம்.

பெறுமக்கள், மருமக்கள்.

9 ஆம் வட்டாரம்
புங்குடுதீவு. (7532)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அம்பலவாணர் மயில்வாகனம்

தோற்றம்: 25 05 1881 மறைவு: 04 11-1987

திதி 23-10 1988

சான்றோர் ஆக்குதல் தந்தைக்கு கடனென்ற ஆன்றோர் வாக்கினை அவனிக்குணர்த்திய எமை ஆளாக்கி அவைமுன் வைத்த எமதரும் தந்தையே! ஈடில்லாத் தெய்வமே உமைநிதம் நினைந்து உம்மைத் தொழுதோம் ஆண்டுத்திதி இந் நாளில் இறைவனை வேண்டுதல் செய்தோம். சாந்தியே பெறுவீர்.

மக்கள், மருமக்கள்,
பேரர், பீட்டப்பிள்ளைகள்.

சச் லூரி வீதி,
இணுவில். ( 7531 )



## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி நவரத்தினம் கனகம்மா

மலர்வு: 18 - 09 - 1920 உதிர்வு: 03 – 11 – 1987

திதி: திரயோதசி 23 - 10 - 1988

அருந் தமிழால் ஔவையவள் தமிழைத் தந்து அற்புத நல் இசையதனுல் உலகை வென்று அன்பிதனுல் எமை யழைத்து இன்பம் கொஞ்சும் அரிய கதை பேசி மனம் மகிழ்ந்து எம் குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்த தாயே! எம்மை அன்போடும் பண்போடும் வளர்த்த தெய்வமே! இவ் வையகத்தில் நற்பிரசைகளாய் வாழ வழி காட்டிய எம் தெய்வமே! என்றும் எம்மிடையே பிரகாசித்துக் கொண்டிருக்கும் இதய தீபமே! உங்கள் பிரிவினை என்னும் துயர் ஓராண்டு சென்றும் தங்களின் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில். (7400)


# மீண்டும் இணக்க சபைகள்

கொழும்பு, அக். 23

மீண்டும் இணக்க சபைகளைக் கொண்டு வரும் சட்டமூலம் ஒன்று அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றம் போகாமல் சிறிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள மீண்டும் இணக்க சபைகளை அமைக்க இந்தச் சட்டமூலம் வழிவகுக்கிறது என்று நீதி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மத்தியஸ்தம் செய்வதும் இணக்கம் ஏற்படுத்துவதும் சிங்கள, தமிழ் கலாசாரங்களில் ஓர் அம்சம் என்று அப்பேச்சாளர் மேலும் சொன்னார்.

காரியாதிகாரி பிரிவு அல்லது கிராமசேவகர் பிரிவு ஒவ்வொன்றிலும் 12பேர் கொண்ட மத்தியஸ்தர் அல்லது இணக்க சபை நிறுவப்படும்.

அப்பகுதியில் உள்ள முன்னணிப் பிரமுகர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். அவர்களில் ஐந்து பேருக்குக் குறையாதோர் அரசு ஊழியராக இருப்பர்.

நியமனங்கள் நீதி அமைச்சரால் செய்யப்படும். ஐந்து பேர் கொண்ட மத்தியஸ்த ஆணைக்குழுவின் சிபார்சின் மீது இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆணைக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களில் மூவர் இளைப்பாறிய உயர்நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதியரசர்களாக இருப்பர்.

25ஆயிரம் ரூபா மதிப்புக்கு உட்பட்ட சகல சிவில் பிரச்சினைகளும் மத்தியஸ்தத்துக்கு அனுப்பப்பட வேண்டும் என்று உத்தேசச் சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

மத்தியஸ்தம் தோல்வி அடைந்தால் மட்டுமே சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றம் செல்ல முடியும்.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு சாராரும் மத்தியஸ்தர் குழுவில் இருந்து தனக்கு விரும்பிய ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

அப்படி தெரிவாகும் மத்தியஸ்தர், மத்தியஸ்தர் குழுவில் உள்ள பொதுவான ஒருவரைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

இப்படி உத்தேச சட்டமூலம் கூறுகிறது. (இ – எ)

# பழைமைமிக்க கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் உரை

மானிப்பாய் அக் 23

''எமதுபழைமை மிக்க கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். பழைமை வாய்ந்த பல விளையாட்டுக்களை நாம் கைவிட்டு வருகிறோம். மாட்டு வண்டிச் சவாரிப் போட்டிதமிழரின் பழைமைவாய்ந்த போட்டி. இதனை இது போன்ற நிலையங்கள் கைவிடாது நடத்தி பாதுகாக்க வேண்டும்.''

சங்குவேலி சனசமூக நிலையம்நடத்திய மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி பரிசளிப்பு விழாவில் சிறப்புரை ஆற்றிய உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய ஆசிரியர் திரு. ஆர். இந்திரன் இவ்வாறு கூறினார்.

திரு. செல்லத்துரை தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் சங்குவேலி உபதபால் அதிபர் திரு. ஜெகநாதன் வரவேற்புரையாற்றினார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திரு. ஜோசப்பத்திநாதன் பின்வருமாறு கூறினார்.

போட்டிகள் மூலமாக நாம் பொறுமையை ஏற்படுத்திக் கொள்ளாமல் சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மனப்பொறுமை ஆகிய நற்குணங்களை கைக்கொள்ள வேண்டும்.

ஆண்களைப் போன்று பெண்களும் விளையாட்டுப்போட்டிகளில் பங்கு கொள்ள வேண்டும்.

இப்படி அவர்கூறினார்.

பிரம்மஸ்ரீ. வா. பால சுப்பிரமணியக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்

மானிப்பாய் – நவாலி விவேகானந்தாக் கல்லூரி அதிபர் திரு பி ஆர். நடராஜன், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய ஆசிரியர் திரு. வி. பரிபூரணந்த சர்மா, ஸ்கந்த வரோதயா கல்லூரி ஆசிரியர் திரு. இரத்தினசிங்கம்உட்பட பலரும் சிறப்புரையாற்றினர்.

மாட்டுவண்டிச் சவாரியில் வெற்றியீட்டியவர்களுக்கு திரு. யோசேப் பத்திநாதன் பரிசுகளை வழங்கினர். (இ 90)

# வாழவழி காட்டுவது சிவநெறியின்மூலங்கள்

யாழ்ப்பாணம், அக். 23

உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதும் அன்பு தொண்டு வழி, பாடு முதலியவற்றால் மக்கள் குலத்தை அணைத்து வாழ வழி காட்டுவதுமே சிவநெறியின் மூலங்களாகும். இந்த மூலகங்ளில் முட்டிருக்குமாறல் சிவநெறிக் கொள்கைகள் கோட்பாடுகள் வளரவோ வளம் பெறவோ வாய்ப்பிருக்காது

வல்லிபுரக் கோயில் பாதயாத்திரைக் குழுவினர் மத்தியில் வரணி வடக்கில் நடந்த சந்திப்பில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது ஆலயமணி ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுட்டிபுரம் முத்துலிங்கம் ஏற்பாடுசெய்திருந்த இச் சந்திப்பில் புலவர் சிவானந்தன் தொடர்ந்து பேசும் போது.

சமைத்தல் என்னும் அடியாகவே சமயம் என்னும் சொல் நமக்குக் கிடைத்திருக்கிறது. அரிசிசமைந்தால் சோறுகிறது, காய் சமைந்தால கறியாகிற்று இது போலவே உள்ளத்தலுள்ள தீய உணர்வுகள் சமைந்து பதமாவதற்கே சமயம் உதவுகிறது.

சமயத்தை மதம் என்று சொல்லுவதை நாம் தவிர்க்க வேண்டும். யானைக்கும் மதம் பிடிக்கும் என்பார்கள். மதம் என்பது அகங்காரம், ஆணவம் அன்பின்மை முதலியவற்றின் கூட்டுணர்வாகும்.

மதயானை உரிபோர்த்த மணவாளனுகிய தமது இறைவனின் இயக்கமே சமயம். நமது மனங்களின் மதங்களை ஒழிக்கும் இயக்கமே நமது சைவ சமயம் ஆகும்.

உடம்பை தக்கவாறு வளர்த்து வழிபடுத்தி வாழ்ந்தால் உயிரையும் செழுமைப்படுத்தலாம் என்பார் திருமூலர். உடம்பை வளர்க்கும் உபாயங்களை அறிந்து உடம்பை வருத்தாமல் உழைக்கப் பழக்க வேண்டும்.

படிப்படியாக வளர்த்துப் புண்ணிய காரியங்களை செய்விக்க வழிப்படுத்த வேண்டும் அப்பொழுது உயிரும் வளர்ந்து பிறந்ததின் பயனையும் இறந்ததின் பயனையும் பெற்றுக்கொள்ளும். பயன்பெறமலும் பயன்படாமலும் வாழ்ந்து மடியக் கூடாதென்பது நமதுசமயத்தின் தலையாய நோக்கமாகும்.

இப்படிஅவர்கூறினர். (இ)

# சிகையலங்கரிக்க கூடுதல் கட்டணம்

குருநகர், அக். 23

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் தமது அங்கத்துவ நிலையங்களில் கட்டண விகிதம் அதிகரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது

இதன்படி பெண்களுக்கு சிகை அலங்காரம் செய்வதற்கு இருபது ரூபாவும், சிறுமிகளுக்கு 15 ரூபாவும் அறவிடப்படும்.

ஆண்களுக்கு சிகை, முகம் அலங்கரிக்க 13ரூபாவும், தனியாக சிகை அலங்கரிக்க 10 ரூபாவும் சேவ் செய்ய நான்கு ரூபாவும்.

சிறுவர்களுக்கு சிகையலங்காரம் செய்வதற்கு ஏழு ரூபாவும் அறவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ–51)

# சுய தொழில் முயற்சியை விரிவுபடுத்த நிஸ்கோ கடன்

யாழ்ப்பாணம், அக். 23

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார். மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய வடக்கு- கிழக்கு மாவட்டங்களின் நிஸ்கோ இளைஞர் கூட்டுறவு ஊடாக பிரதேசத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்களை பயன்படுத்தி சுய தொழில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுயதொழில் முயற்சியை மேலும் விரிவுபடுத்த முயலும் இளைஞர். யுவதிகளுக்கு, சுய தொழில் வாய்ப்பு கடன்கள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டங்களில் விவசாயம், மேட்டு நிலப் பயிர்ச்செய்கை, நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம், மரக்கறிச் செய்கை, கால் நடை பண்ணைவளர்ப்பு, பனம்பொருள் உற்பத்தி, குடிசைக்கைத் தொழில், மேசன் வேலை, தச்சு வேலை, சிறிய கைத்தொழில் முயற்சிகள், சிறு வர்த்தக முயற்சி[illegible], வானொலி, தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, துவிச்சக்கர வண்டி திருத்துதல், விளம்பரசேவை போன்றவை அடங்குகின்றன.

இவைகளுக்கான திட்டங்களில் தனிநபர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், குழுக்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் 16 வீதம் குறைந்தவட்டியுடன் 1வருட கடன் கழிவு காலத்துடன் வழங்கப்படும்.

பிரதேச இளைஞர், யுவதிகள் தமது மாவட்ட நிஸ்கோ முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப் படுகின்றனர். (இ)

## பதிவாளர்

சுழிபுரம், அக். 23

மூளாய் ஐக்கிய சங்க கூட்டுறவு வைத்திய சாலையில் இயங்கிவரும் வடஇலங்கை மருத்துவக்கல்லூரிப் பதிவாளராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. க. அ[illegible] பணியாற்றி வருகின்றார். (இ–ச)

## இளைஞர் கொலை:

# லொறிச்சாரதியும் மற்றொருவரும் கைது!

வவுனியா அக்– 23

கடந்த 12ஆம் திகதி வவுனியாவில் இருந்து கொழும்புக்கு வெங்காயம் ஏற்றிச் சென்ற லொறி ஒன்றின் கிளீனர் ஒருவர் மர்மமானமுறையில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து லொறிச்சாரதியும்உடன் சென்ற வேறொருவரும் சந்தேகத்தில் மீரிகமப் பொலீஸாரினுல் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த செல்லத்துரை என்ற (42 வயது) மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரழந்தவராவார்.

இறந்தவரின் உடலில் வெட்டுங்காயங்கள் காணப்பட்டன என்றும் வரக்ககாப்பொலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட பின்னர் அவர் இறந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

பெரும்பான்மைஇனத்தைச் சேர்ந்தவர்களான லொறிச்சாரதியும் இன்னெருவரும் மீரிகம பொலிஸிலலொறியுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் விசாரணை நடைபெறுகிறது. (ஒ-164)

# சுதுமலை சிந்மயபாரதி நூற்ருண்டு விழா

யாழ்ப்பாணம், அக்.23

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலய நூற்ருண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை அதிபர் திருமதி ஜே கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதேசக் கல்விப்பணிப் பாளர் திரு. வெற்றி வேலு சபாநாயகம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக மானிப்பாய் கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் கலந்து கொள்வார் (இ)

## மக்கள் முகம்

### சுகாதார அபிவிருத்திச் சங்கத்தலைவர்

மானிப்பாய், அக். 23

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. சிறீகாந்தா வலிகாமம் தென்மேற்கு சுகாதார அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுகாதார அபிவிருத்தி வேலைகளுக்கென சங்கம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டுள்ளது

இச்சங்கத்தின் மூலம் வலிகாமம் தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குட்பட்ட கிராமங்களில் சுகாதார சம்பந்தமான கருத்தரங்குகளை நடத்த எண்ணியுள்ளதாக டாக்டர் வி. சிறீகாந்தா தெரிவித்தார்.

இச்சங்கத்தின் செயலாளராக திரு. எஸ். சிவகுமாரனும் பொருளாளராக திருமதி இரத்தினதேவி ஜெயரட்ணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். (இ - 90)

## தென்மாகாண

# பாடசாலைகள் 25 இல் ஆரம்பிக்கப்படமாட்டா

கொழும்பு, அக் 23

முன்னர் அறிவிக்கப் பட்டபடி தென் மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது.

இவை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இப்பாடசாலைகளின் நடவடிக்கைக் குழுக்களின் தீர்மானத்தைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் திறக்கப்படுவது அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களின் தலைமையிலான நடவடிக்கைக் குழுத் தீர்மானத்தைப் பொறுத்தது என்று கல்வி அமைச்சு மேலும் அறிவித்தது.

திறக்கப்படாத பாடசாலைகள் எப்போது திறக்கப்படும் என்பதை பாடசாலை அதிபர்களைச் சந்தித்து பெற்றோர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சு கூறியுள்ளது (இ-எ)

# டாக்கா செல்லும் மத்தியஸ்தர்கள்

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்று விளையாட்டுப் போட்டிக்கு இலங்கையில் இருந்து இரண்டு மத்தியஸ்தர்கள் டாக்கா செல்கின்றனர்.

அவர்கள் வருமாறு திரு. எஸ். பொன்னுத்துரை, திரு. கே. ரி. பிரான்சிஸ்.

திரு. எஸ் பொன்னுத்துரை: யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவரான இவர் உள்நாட்டு இறைவரித் திணைக்கணத்தில் வரிமதிப்பீட்டாளராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. கே. ரி. பிரான்ஸிஸ் ரயில்வேத்திணைக்களத்தில் தலைமைக் காவலராகப் பணியாற்றும் இவர் கேகாலை சென். மேரி மகா வித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவர். (இ-எ)


## முதலாம் வருட நினைவஞ்சலி



ம. சிற்னி விலியம்

படைப்பு: 28-06-1963 அழிப்பு: 23-10-1987

ஆண்டொன்று சென்றதையா
பகைவர்கள் அழிப்பினாலே
சிற்னி தனியான பாதையில்
தனி வழி சென்றுயோ?
போன பாதை பார்த்திருந்தோம்
நீ வருவாய் என்று
சூடுபட்டு வீழ்ந்தபோது
சூழ்ந்து நாம் நிற்கவில்லை
மயங்கிச் சரிகையிலே
மார் போடும் அணைக்கவில்லை
உமது ஆருயிரை அநியாயமாக
அழித்து எம்மைப் பரிதவிக்க
விட்டனரே பாவிகள்
ஆனி வெள்ளி நீ பிறந்தாய்
ஐப்பசி வெள்ளி நீ மறைந்தாய்
பாசமுள்ள (கிரனியின்) உயிர்காக்க
சிற்னி உன்னுயிர் ஈந்தாயோ!



லோர்த்தி பீற்றசன்

படைப்பு: 10-11-1901 அழிப்பு: 22-10-1987

ஓடி விட்டது ஓர் ஆண்டு
ஓயவில்லை எம் துடிப்பு
இன பந்துக்கள் இருந்தென்ன
நீ ஈண்ட மக்கள்தாம் இருந்தென்ன
உன் உயிர் சாத்திட வந்தனரோ
உன் உயிர் காக்க வந்தானே
துணிவு கொண்ட உன் பேரன்
காலன் அவன் மனம் பொறுக்காது
கவர்ந்தானே இருவரையும்
தன்னிடத்தில்
உன்னுயிர் காப்பதற்கோ
புகலிடம் தேடிச் சென்றீர்
புகையிரத நிலையத்தில்
பகைவர்கள் உன்னையும்
வஞ்சம் தீர்த்தனரோ.

கல்லறையும் இல்லையே கட்டி அழுவதற்கு!

தினம் உங்கள் பிரிவை எண்ணி ஆத்ம சாந்திக்காக வருந்தும்:

டடி, மம்மி,
தம்பிமார், தங்கை.

மகன், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

8, மடம் வீதி, யாழ்ப்பாணம். [7528]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு!

**பொருள்:**
உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக் காப்பது போல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. - 892/8 நாவலர் வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23078
23-10 1988 அ: செ. இல. 82

# தெற்கில் தேர்தல்...

ஜனாதிபதி தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. நவம்பர் பத்தில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு டிசம்பர் 19 இல் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆளுங் கட்சியை அலங்கரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கிறது.

தேர்தல் நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முயன்று வருவதாகச் சொல்லப்படுகிறது. வன்செயல்கள் நடக்கும் போது தேர்தல் நடத்துவது என்பது மக்கள் மீது தேர்தலைத் திணிக்கும் சர்வாதிகாரப்போக்கு என்பதை அரசு உணர்ந்து, அவ்வழி செல்வது ஆகாது என நினைத்து விட்டதோ என்று மக்கள் மயக்கமுற நேரிட்டுள்ளது.

அரசாங்கம் தனது தரப்பில் தன்னிச்சையான யுத்த நிறுத்தம் (இராணுவத்தாக்குதல் நிறுத்தம்) ஒன்றை இருபதாம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு அறிவித்திருக்கிறது. தெற்கில் வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதிச் சூழ்நிலையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசாங்கம் நினைக்கிறது என்பதையே யுத்த நிறுத்தம் பிரதிபலிப்பதாக எழுந்தமானத்தில் கொள்ள வைத்துள்ளது.

ஆனால் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தங்கள் விரும்பும் விளைவைத் தருவதில்லை என்பதற்கு முன் உதாரணங்கள் உண்டு. அதுவும் வாரக்கணக்கில் குறுகிய காலம் நிர்ணயித்து அரசாங்கங்கள் அறிவிக்கும் யுத்த நிறுத்தம் மீது எதிராளிகள் நம்பிக்கை வைப்பது குறைவு.

ஆகையால், காலவரையறை இல்லாத யுத்த நிறுத்தம் செய்து, தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவிக்காத அரசாங்கத்தின் 'விட்டுத்தரும்'' போக்கை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே வி பி) எப்படி நோக்கும் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும், இலங்கையிலிருந்து இந்தியப்படை திருப்பி அனுப்பப்பட வேண்டும், பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பனவற்றை முக்கியமாக முன்வைத்தே ஜே. வி பி தனது கிளர்ச்சியை, வன்செயல்களை ஆரம்பித்தது.

தீ வளர்ந்திட நெய்யிடும் போக்கில் அரசின் பல நடவடிக்கைகள் அமைந்ததால், ஜே வி பி. யினரின் உத்வேகம் அதிகரித்தது. மக்களில் ஒரு சாராரும் அரசு எதிர்ப்பாளர்களாக மாற நேர்ந்தது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம், இந்தியப் படையைத் திருப்பி அனுப்புதல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை உடனடியாக மாற்றப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறது.

ஆகையால், அமைச்சர் லலித்தின் தன்னிச்சையான யுத்த நிறுத்தத்துக்கு, ஜே.வி பி. யினரின் வரவேற்பு பூஜ்யமாக இருக்கும் என்றே பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே அரசும், அமைச்சர் லலித்தும் தெற்கில் அமைதியைக் கொண்டு வந்து, அந்த அமைதிச் சூழ்நிலையில் தேர்தலை நடத்த வேண்டும் என்று உள்ளார்ந்தரமாக விரும்பினால் யுத்த நிறுத்தத்துக்கு கால எல்லை விதிக்காமல், ஜே.வி பி யினரை அழைத்துப் பேசி, கொண்டு கொடுத்து, நிலையைச் சீராக்க வேண்டும்.

இல்லையேல் யுத்த நிறுத்தம் வெறும் நாடகம் என்ற நிலையே உருவாகும்.

நாம் சந்தர்ப்பம் வழங்கினோம், அவர்கள் அதனைப் பயன்படுத்தவில்லை என்று கூறி வன்செயல்கள் மத்தியில் தேர்தலைத் திணிக்கவோ, அல்லது நிலைமையை சனநாயகக் கட்டுக்கோப்புக்குள் கட்டுப்படுத்த முடியவில்லை. ஜனாதிபதித் தேர்தலை நடத்தமுடியவில்லை என்று கூறி இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதற்கான முத்தாய்ப்புத் தானோ என்று மக்கள் சந்தேகம் கொள்வதைத் தவிர்க்க முடியாது.

தேர்தலுக்கு அவசரப்படுவதற்கு முன் அமைதி வேண்டும். அந்த அமைதியின்போது பேச்சுக்கள் நடத்த வேண்டும். பெரும் பெரும் உலக அரசியல் பிரச்சினைகள் பலவும் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்படும்போது, அரசு-ஜே. வி. பி பிரச்சினையைத் பேசித் தீர்க்க முடியாதா?

அரசாங்கங்கள் மக்களால், மக்கள் நலனைப் பேணுவதற்காக உருவாக்கப்படுபவை. மக்கள் விணாகச் செத்தொழியும் போது, ஆட்சியில் உள்ளவர்கள் தங்கள் பதவி ஆசையை தமது விருப்பு வெறுப்புகளைப் பேண நினைக்கும்போது, நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு வழி பிறக்கிறது என்பதை சனநாயகம் பற்றித் தம்பட்டம் அடிக்கும் தலைவர்கள் மறப்பது ஏனோ?

லப்தீப் அணி- ஸமது அணியாக

# முஸ்லிம் லீக் தமிழ் நாட்டில் இரண்டாகப் பிரிந்தது!

சென்னை, அக் 22
இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ் நாட்டில் இரண்டாக பிளவுபட்டது.

லத்தீப் அணி என்றும் ஸமது அணி என்றும் இரண்டாகப் பிரிந்தன.

ஏழு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தேசிய முன்னணியை தி.மு.க. அமைத்தது அல்லவா!

அதைத் தொடர்ந்து தி.மு.கவுடன் தோழமை கொண்டு வந்த முஸ்லிம் லீக்கில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது.

தி. மு.கவுடனான உறவைத்துண்டிக்க வேண்டும் என்று லீக் தலைவர் ஸமது அறிக்கை வெளியிட்டார்.

அதைக்கண்டித்து பொதுச் செயலாளர் லத்தீப் அறிக்கை வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து அப்துல் ஸமது தலைமையிலான அணி கூடி ஜனாப் லத்தீபை லீக்கில் இருந்து வெளியேற்றுவதாக அறிவித்தது.

இதனால் ஏற்பட்ட பிரச்சினை பற்றி தீர்வு காண முஸ்லீம் லீக்கின் அகில இந்திய தலைவர் சுலைமான் சேத் நேற்று முன்தினம் திருச்சியில் லீக் அமைப்பாளர்களைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். அதன் பின்னர் தி.மு.கவுடனான தொடர்பை முஸ்லீம் லீக் துண்டிக்கும் என அறிவித்தார்.

கருத்து வேறுபாடு கொண்ட ஜனாப் லத்தீப் தொடர்ந்தும் கூட்டுச் செயலாளராகப் பதவி வகிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் நேற்றுச் சென்னையில் ஜனாப் லத்தீப் தலைமையில் கூடிய தமிழ்நாடு முஸ்லிம் லீக் பொதுக்குழு, ஜனாப் அப்துல் ஸமதுவை லீக்கில் இருந்து வெளியேற்றுவதாக அறிவித்தது.

இடைக்காலத் தலைவராக முன்னாள் எம்.எல், ஏ. அப்துல் ஜபார் என்பவரைத் தெரிவு செய்தது. (எ)

## பிறந்த தின விழா

சென்னை, அக். 22
ராஜராஜ சோழனின் 1,005ஆவது பிறந்த தினத்தை ஒட்டி தஞ்சை பெரியகோவிலில் விசேட பூஜை, வழிபாடுகள் நடைபெற்றன.

ராஜராஜசோழன் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. (எ)

வெளி உலகில்

## தேர்தல் சின்னம் 'அம்பு'

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் போட்டியிடும் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அம்பு தேர்தல் சின்னமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

'வாள்' சின்னத்தையே இக்கட்சித்தேர்தல் கமிஷனிடம் கேட்டிருந்தது.

தேர்தல் சின்னங்கள் பட்டியலில் 'வாள்' இருக்கவில்லை அதனால் 'வாள்' சின்னம் கிடைக்கவில்லை. (எ)

## சீனாவின் சனத்தொகை

பீகிங், அக். 22
சீனாவின் சனத்தொகை 107 கோடி 20 லட்சம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

1986 இல் 1 41 சதவீதமாக இருந்த அதிகரிப்பு 1987 இல் 1 45 சதவீதமாக அதிகரித்தது

# காஞ்சி சங்கராச்சாரியாருக்கு அமைச்சர் ராஜதுரை அழைப்பு

''எங்கள் நாட்டுக்கு வாருங்கள்'' என்று காஞ்சி சங்கராச்சாரியாருக்கு இலங்கை மந்திரி ராஜதுரை அழைப்பு விடுத்துள்ளார்.

### மாநாடு

காஞ்சிபுரம் அருகே ஒரிக்கை என்ற இடத்தில் ''ஜனகல்யாண்'', ''ஜனசாகரன்'' ஆகிய அமைப்புகளின் மாநாடு நடந்தது. மாநாட்டில், டெல்லி, கர்நாடகம், ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 2 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் முன்னிலையில் மாநாடு நடந்தது.

மாநாட்டில், இலங்கை மந்திரி ராஜதுரை கலந்து கொண்டார். மாநாட்டில் அவர் பேசுகையில் கூறியதாவது:-

நான் பலமுறை தமிழ் நாட்டிற்கு வந்து இருக்கிறேன் ஆனால் பொதுக் கூட்டங்களில் பேசியது இல்லை. இப்போது சாமியைப் பார்க்க வந்தேன். அவருடைய ஆசியோடு பேச வாய்ப்பு கிடைத்தது.

,,இலங்கையில் அமைதி நிலவ அசுவமேதயாகம்'' நடத்த வேண்டும்'' என்று சொன்னார்கள். பெரியவர்கள் ஆசியோடு அதைச் செய்தோம்.

இலங்கையில் உள்ள பெரிய ஓட்டல்களில் குரான், பைபிள் போன்ற வேத நூல்கள் இருக்கின்றன. அங்கு பகவத்கீதை வைப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறேன்.

இலங்கையில் அமைதி ஏற்பட சுவாமிகள் ஆசி கூற வேண்டும். அவர் இலங்கைக்கு வர வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.''

இவ்வாறு இலங்கை மந்திரி ராஜதுரை பேசினார்.

மாநாட்டில் ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் பேசியதாவது:-

''கடவுள் மறுப்பு இயக்கம் தோன்றியுள்ளது. இதனால் ஒழுக்கக்கேடு அதிகரித்துள்ளது. தேச பக்தி குறைந்து வருகிறது நமது நாட்டின் கலாசாரம், பண்பு காப்பாற்றப்பட வேண்டும்.

ஆன்மீக சுத்தம் ஏற்படுத்துவதற்காக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. மத வெறி கொண்ட நாடாக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மத நெறியோடு ஒட்டிய நாடாக இருக்க வேண்டும்.

இவ்வாறு ஜெயேந்தி சரசுவதி சுவாமிகள் கூறினார். (எ-4)

## நோபல் பரிசு

நோபல் பொருளாதாரப் பரிசு பிரெஞ்சுக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

1911 ஆம் ஆண்டில் எண்ணெ விற்கும் கடைக்காரருக்கு மகனாகப் பிறந்த திரு. மொறிஸ் அலியேயா என்பவரே பொருளாதாரத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர்.

1960 இல் உருவாக்கப்பட்ட நோபல் பொருளாதாரப்பரிசு, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவது இதுவே முதல் தடவை என்று அறிவிக்கப்படுகிறது.

# இளர்ச்சிக்காரருடன் சேர்ந்த மாணவருக்கு பர்மா அரசு கடும் எச்சரிக்கை

ரங்கூன், அக் 22
கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து உள்ள மாணவருக்கு பர்மா இராணுவ அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது:

''அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் கிளர்ச்சிக்காரர்களுடனான தொடர்பை முறித்துக் கொண்டு திரும்பி வர வேண்டும், இல்லையானல் அரசின் எதிரிகளாக அவர்கள் கருதப்படுவர்''—

இது பர்மா அரசு விடுத்த எச்சரிக்கை.

இதனிடையில்—

எல்லைப்புற மாகாணத்தில் சுயாட்சி கோரும் கரேன் கிளர்ச்சிக்காரர்கள் கைப்பற்றியுள்ள இராணுவ முகாம் ஒன்றை மீட்கும் போராட்டத்தில் பர்மா இராணுவம் ஈடுபட்டிருக்கிறது.

கடந்த ஒரு வாரகாலமாக நடந்து வரும் இந்த யுத்தத்தில் 35 வீரர்கள் கொல்லப்பட்டனர். 95 பேர் காயமடைந்தனர் என்றும் பர்மா அரசு அறிவித்தது.

கரேன் கிளர்ச்சி கடந்த 30 ஆண்டுகளாக இடம் பெற்று வருகிறது. (எ)

தென் லெபனான்:

# இஸ்ரவேல் பதில் தாக்குதல் 15 பேர் பலி; 35 பேர் காயம்

ஜெருசலம், அக் 23
தென் லெபனான் மீது இஸ்ரவேலின் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர், 35 பேர் காயமடைந்தனர்.

கடந்த சில தினங்களுக்குப் முன்னர், முஸ்லிம் விடுதலை இயக்க உறுப்பினர்கள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் 7 இஸ்ரவேலிய வீரர்கள் உயிரிழந்தனர்.

அதற்கு பழிவாங்கு முகமாக இஸ்ரவேலிய போர் விமானங்கள் தென் லெபனான் மீது நேற்று குண்டு வீச்சு நடத்தின. (எ)

# ஒற்றையாட்சியின் கீழ் தமிழினம் ஒரு போதும் உரிமை பெறமுடியாது

## தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் சிவானந்தசுந்தரத்தின் இறுதிப் பேச்சு

தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் திரு.கே. சிவானந்தசுந்தரம் வெள்ளி மாலை சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன் அரியாலையில் நிகழ்த்திய உரை:

யாழ்ப்பாணம், அக். 23
ஒற்றையாட்சியின் கீழ் தமிழினம் ஒரு போதும் தனது உரிமையைப்பெற முடியாது. சமஷ்டி, சுயாட்சி அமைப்பு ஒன்றின் மூலமே தமிழ் தேசிய இனம் தனது நலன்களை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் திரு. கே சிவானந்தசுந்தரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரியாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலைத் தளபதி லெப் கேணல் சந்தோசத்தின் ஓராண்டு நினைவஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு திரு சிவானந்தசுந்தரம் உரை நிகழ்த்தினர்.

அரியாலைப் பிரஜைகள் குழுத்தலைவர் திரு. பொ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரியாலைப் பிரஜைகள் குழுச் செயலாளர் இரா. முருகையன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. கே. சிவானந்தசுந்தரம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

மாகாணசபை மத்திய அரசின் பூரண கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும் இது ஒரு சுயாட்சி அமைப்பு அல்ல எனவும் மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதிகாரமற்ற இந்த மாகாணசபை அமைப்பினால் தமிழ் மக்களின் காணிப்பிரச்சனையை குடியேற்றப் பிரச்சனையை தீர்க்கமுடியாது.

'தமிழ் இனத்தை தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும், தமிழர்களின் சுயநிர்ணயஉரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பிரஜாஉரிமை வழங்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஏனைய ஐந்து தமிழ்ப் போராளிகள் குழுக்களும் திம்புப் பேச்சுவார்த்தையின் போது முன் வைத்திருந்தன.

ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய ஐந்து அமைப்புக்களும் இவற்றைக் காற்றில் பறக்க விட்டுள்ளன.

ஒற்றையாட்சி முறையின் கீழ் அமையும் [illegible] தமிழர்கள் தமது [illegible] பெற்றுக் கொள்ள முடியாது.

இன் நிலையில் இந்திய அரசு அதிகாரமற்ற இந்த மாகாணசபையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என எம்மை வற்புறுத்துகின்றது

இப்படி அவர் கூறினர்.

திலீபனின் தந்தை திரு இராசையா, திரு. கே. சதாசிவம், வடமராட்சி மாணவர் ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதி, யாழ். மாணவர் ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதி உட்பட பலரும் உரை நிகழ்த்தினர்கள்.

நிகழ்ச்சியின் போது 'லெப கேர்ணல் சந்தோசம் வீதி' பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது.

பண்டிதர் ப. கணபதிப்பிள்ளை நன்றியுரை நிகழ்த்தினர். (இ-5)

## இந்து இளைஞர் ஆட்சிக் குழு கூட்டம்

யாழ்ப்பாணம், அக் 23
யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆட்சிக் குழுக் கூட்டம் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது (இ-5)

## "மக்கள் வாழ்வில் பழமொழிகள்"

யாழ்ப்பாணம்' அக் 23
''மக்கள்வாழ்வில் பழமொழிகள் '' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி அளவில் பரிஜோவான்கல்லூரிமண்டபத்தில் நடைபெறும்,

திரு. க. சச்சியானந்தசிலம் (சச்சி மாஸ்ரர்) அவர்களால் எழுதப்பட்ட இந்த நூல புத்தொளி திரு. ந சிவபா[illegible] வெளி[illegible] வைக்கப்படும். (இ-5)

## நீராவியடி கடையிற் சுவாமி கோயிலில்

யாழ்ப்பாணம், அக் 23
நீராவியடி கடையிற் சுவாமி கோயிலில் வருடாந்த சுமங்கலி பூஜை (தீபலஷ்மி பூஜை) நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

மாலை 3.30 மணிக்குச் சிவன், அம்பாளுக்கு விசேஷ அபிஷேகமும், 4.00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், அதனைத் தொடர்ந்து வருஷத்திற்கு ஒருமுறை ஐப்பசிப் பௌர்ணமி தினத்தில் நடைபெறும் தீப பூஜையும் (சுமங்கலி பூஜை) நடைபெறவுள்ளன. (இ)

## வாசகர் நெஞ்சம்

# மனிதாபிமானம் வேண்டும்

இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்கு நிவாரணம் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் கடந்த 12 ஆம் திகதி குறிப்பிட்ட ஓர் இடத்தில் வழங்கப்பட்டன.

காலையிலிருந்து மாலை ஐந்து மணிவரை விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் பொதுமக்கள் பலவித இன்னல்களை எதிர்நோக்கியதைக் காணக்கூடியதாக இருந்தது.

போதிய முன்னறிவித்தல் இன்றி விண்ணப்பப் படிவங்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பெறுவதற்காக நான் நான்கு தடவைகள் செல்ல வேண்டியதாயிற்று.

அன்றையதினம் சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பெறுவதற்கு வயோதிபர் பலர் வந்திருந்தனர்.

விண்ணப்படிவங்களை பெற்றுக்கொள்ள நேரில் வருவதற்கு வசதியில்லாத வயோதிப நோயாளர்கள் சிலர் தம் சார்பில் தமது குடும்ப அங்கத்தினர்களை அனுப்பியிருந்தனர்

என்றாலும் அவர்களுக்கு விண்ணப்படிவங்கள் வழங்கப்படவில்லை

அசம்பாவிதங்களின் போது பலவித இன்னல்களையும் அனுபவித்து சகல விதங்களிலும் பாதிப்புக்குள்ளானவர்கள் நிவாரணப்படிவங்கள் பெறுவதற்காக வந்த இடத்தில் பட்ட இன்னல்களைக் கண்டபோது மனம் வேதனை அடைந்தது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் கூடுதலான மனிதாபிமானத்துடன் செயல்பட்டால் பொதுமக்களின் இத்தகைய இன்னல்களை மேலும் தவிர்க்கலாம்.

கொக்குவில் — என். ரஞ்சித்குமார்

## பாலஸ்தாபனம்

பொன்னாலை ஸ்ரீ வரதராசப்பெருமாள் ஆலய பாலஸ்தாபனம் இன்று 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கோவில் திருத்தவேலைகள் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மகாகும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

## முகாம் மூடப்பட்டது

வல்லிபுரம் பகுதியில் கடந்த ஒன்பது மாதகாலமாக இருந்த இந்திய அமைதிகாக்கும் படையினர் முகாம் மூடப்பட்டுள்ளது.

இம் முகாமிலிருந்த துருப்புக்களும் கனரக வாகனங்களும், தாங்கிகளும் வல்லையிலுள்ள இராணுவ முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

# உதயன்

23 - 10 - 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள் சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

## விஞ்ஞானபீட விசேட பட்டமாணி

## பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், அக் 23 யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் விசேட பட்டமாணிப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன.

**பௌதிகம்**

முதல் வகுப்பு சித்தி: எஸ். தயாபரம்

இரண்டாம் வகுப்பு சித்தி (மேற் பிரிவு): வி வசந்தன், சி. பிலிப் சுகுமார், எஸ். ஜி. ரேமன்.

இரண்டாம் வகுப்பு சித்தி (கீழ்ப் பிரிவு): எஸ். சுவேந்திரன்

சாதாரண சித்தி: பி. மணிவாசகர், வி. சிவானந்தன், எஸ். சுகுமாரலிங்கம், எஸ். தெய்வநிதி

எஸ். தயாபரமுக்கு சேர். அருணாசலம் மகாதேவா ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது

**இரசாயனம்**

முதல் வகுப்பு சித்தி; எஸ். சசிகலா, செல்வி ஏ. டி. சோமசுந்தரம்.

இரண்டாம் வகுப்பு சித்தி (மேற் பிரிவு): பி சுகனியா, எஸ் மீனலோஜினி, எம். கௌரி, ஆர். ஜெயகௌரி, எம். ரேவதி, எஸ். சாந்தினி, எஸ் தாமோதரம்பிள்ளை, எம். ஏ பரமபதி.

இரண்டாம் வகுப்பு சித்தி (கீழ்ப் பிரிவு): கே சுபத்திரா.

செல்வி ஏ டி சோமசுந்தரத்திற்கு சேர் அருணாசலம் மகாதேவா ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

**விலங்கியல்**

முதல் வகுப்பு சித்தி: ஏ. டி சந்திரிக்கா, பி சிவலோகநாதன்

இரண்டாம் வகுப்பு சித்தி (மேற் பிரிவு): வி. புவனேந்திரன்

பி சிவலோகநாதனுக்கு சேர் சங்கரப்பிள்ளை பரராஜசிங்கம் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

**புள்ளி விபரவியல்**

இரண்டாம் வகுப்பு சித்தி (மேற் பிரிவு): எஸ். ஜனார்த்தனன்

இரண்டாம் வகுப்பு சித்தி (கீழ்ப் பிரிவு): கே. குலமுருகன், வி. எம். ஜெருகான்

எஸ். ஜனார்த்தனனுக்கு பி. கனகசபாபதி ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானத்தில் 3 ஆவது பரீட்சை: நூன சித்தி; என். நிர்மலா.

செல்வி வி. லோகநாதனுக்கு இரசாயனவியலில் அதிக புள்ளிகள் பெற்றமைக்காக ரட்ணநாதர் ஞாபகார்த்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பொதுப் பட்டமாணிக்கான பி கனகசபாபதி ஞாபகார்த்தப் பரிசு வி. சுரேஸிற்கு வழங்கப்பட்டுள்ளது. (ஓ-5)

## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் கனகரத்தினம் நிஷாந்தன்**

படைப்பு: 09, 06. 1984 இறப்பு 04. 11. 1987

ஆசை நிஷாந்தா! உன் பிரிவைத் தாங்க முடியாது வேதனையால் வாடுகின்றோம்.

அம்மா, அப்பா, மாமன்மார், சித்திமார், அம்மம்மா, அப்பப்பா,

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**ந. சபாபதி அவர்கள்**

பிறப்பு: 08- 08- 1920 பறிப்பு: 23- 10- 1987

திதி: 10- 11- 1988

ஒன்றல்ல இரண்டல்ல
ஏழினையே பெற்றெடுத்தாய்
ஏகிடும் போதினிலே
சூழ்ந்தவர் நிற்பரென்று

எரிந்த வீட்டினிடையினிலே
சருகிக் கிடந்த எலும்புகளைக்
கண்டே துடித்த எங்கள் நிலை
எடுத்துச் சொல்வார் யார் அன்று!

உறவுகளைக் காப்பதற்காய்
உயிர் கொடுத்த உத்தமனே!
தியாகத் திருவுருவாய்
நிலைத்திருப்பாய் நீ என்றும்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்மார்.

3 ஆம் சட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (7407)

## தமிழ் ஈழம் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி) எனக் கேட்டனராம்.

அஞ்சலிக் கூட்டத்திற்குச் சென்று திரும்புவதாக பஸ்ஸில் இருந்தவர்கள் பதில் அளித்தனர்.

யார் உங்களைத் தலைமைவகித்து அழைத்துச் சென்றனர் என இளைஞர்கள் கேட்ட போது அச்சமயம் அங்கிருந்த தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் திரு சிவானந்தசுந்தரம் தானே அழைத்துச் சென்றதாகப் பதில் அளித்தாராம்.

விசாரிக்க வேண்டும் என்று கூறி பஸ்ஸில் இருந்து இறக்கிச் சென்ற இளைஞர்கள் சுமார் 100 மீற்றர் தூரத்தில் அவரை வீதியோரமாக நிறுத்திச் சுட்டுக் கொன்றனர் என்று கூறப்படுகிறது.

இவரின் சடலம் சுமார் மூன்று மணி நேரமாக வல்லைவெளியில் கிடந்தது.

சம்பவத்தைக் கேள்வியுற்ற திரு. சிவானந்தசுந்தரத்தின் மனைவியும் மற்றும் உறவினரும் புலோலி அமைதிப்படை முகாம் சென்று விசேஷ அனுமதி பெற்றுச் சடலத்தை அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

பொதுமக்களின் அஞ்சலிக்காக பருத்தித்துறையில் உள்ள அவரின் வாசஸ்தலத்தில் பூதவுடல் வைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தை அடுத்து வடக்கு - கிழக்கில் உருவாக்கப்பட இருந்த இடைக்கால அரசுக்குத் தலைமை வகிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மூவர் பட்டியலில் திரு. சிவானந்தசுந்தரத்தின் பெயரும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-118 70-160)

## நன்றி நவில அழைப்பு

**1862 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 125 வருடங்களாக**

இறைவன் எம் திருக்குடும்பச் சபையை யாழ் மண்ணில் மலரவும் சேவை செய்யவும் செய்த அருள்வளங்கட்கு நன்றி நவில,

**இம்மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ் மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றோம்.**

எம்முடன் இணைந்து நன்றி நவில சகோதரக் குருக்கள், துறவறச்சகோதர சகோதரிகள், குருத்துவமாணவர்கள், பெற்றோர், பெரியோர், நண்பர்கள், உபகாரிகள், எமது பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் துணை அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"எம் சபை திருக்குடும்பச் சபை - எம் உறவு அனைவருக்கும் சொந்தம்"**

நன்றி

**திருக்குடும்ப மாகாணத் தலைவி,**
யாழ்ப்பாணம்.

(7299)

## விஞ்ஞான பட்டதாரி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி) இடைக்காடர் சின்னையா (இடைக்காடு,) ரீ. மனோகரன் (சாவகச்சேரி,) பி. மோகன் (சாவகச்சேரி,) கே முருகவேள் (அச்சுவேலி,) எஸ் நற்குணம் (கொக்குவில்) கே. றேணுகா (திருநெல்வேலி) ரீ சிவானந்தன் (கரணவாய் வடக்கு) ஜீ சாரதாதேவி (பம்பலப்பிட்டி) எஸ். செல்வசுதர்சனி (கொழும்பு 4) எஸ். ஸ்ரீ கனகசபை (திருநெல்வேலி வடக்கு) கே. செல்வதுரை (உரும்பிராய் வடக்கு).

எஸ் மோகனராஜா (நவாலி தெற்கு) சீ. எஸ். யோகநாதன் (அராலி) ஏ மகாலிங்கம் (கரவெட்டி மேற்கு) எஸ். சங்கரப்பிள்ளை (கைதடி வடக்கு) ரீ. விஜயகுமார் (நல்லூர்) ரீ விஜேதா (சுண்டுக்குளி) ஏ. வசந்தா பரீனா (கரவெட்டி மத்தி) பீ. யோகினி (புலோலி மேற்கு) என். ஞானச்சந்திரன் (ஆனைக்கோட்டை) என் லோகராணி (பருத்தித்துறை) கே. இரத்தினசிங்கம் (அனலைதீவு மேற்கு) எஸ் சோதிலிங்கம் (ஏழாலை மேற்கு) எஸ். செல்வமலர் (பருத்தித்துறை) எஸ். சத்தியமூர்த்தி (வீமன்காமம்) எஸ். சாந்தகுமாரன் (கொழும்பு 6) ஆர். தேன்மொழி (கம்பர்மலை) என். ஆலாலசுந்தரம் (அரியாலை) கே. இந்திரபுத்திரி (யாழ்ப்பாணம்) ஏ. எம். ஜே. வை ஜோசப் (யாழ்ப்பாணம் ஆர். கருணேஸ்வரி (துன்னாலை வடக்கு) ஈ. எம். மரீனா (மாதகல்) கே. பிரமீளா (சாவகச்சேரி) கே. கமலாதேவி (வவுனியா) வை. சித்திரலதா (சங்குவேலி தெற்கு) ஆர். ரஞ்சினி (புலோலி தெற்கு) பி. ராஜினி (கொக்குவில்) (மிகுதி நாளை)

## மன்னார் கச்சேரி இயங்குகிறது

யாழ்ப்பாணம், அக். 23 மன்னார் கச்சேரி மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் பேரப்பட்டதை அடுத்து மன்னார் கச்சேரியும் மூடப்பட்டது.

இத்தவேளையில் மட்டக்களப்புக் கச்சேரி இன்னமும் இயங்க அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. (ஓ-9)

## ஷார்ஜா கிண்ணம்

**மேற்கிந்திய அணிக்கு**

ஷார்ஜா அக் 23 மேற்கு இந்திய அணி 11 ஓட்டங்களால்பாகிஸ்தான் அணியைத் தோற்கடித்து ஷார்ஜாக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (ஓ-எ)

## உண்ணாவிரதம். . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி] 15 மாதங்களில் பலவாக் குறுதிகள் தரப்பட்ட போதும், எதுவும் நிறைவேற்றப்படாமையினை வன்மையாகக் கண்டிக்கிறோம்

மரண யாத்திரை மேடையில் சாவேஎமக்கு விமோசனம் என்ற நிலையில் முதற்கட்டமாக உண்ணாவிரதம் ஆரம்பித்த ஐவருடன் 10-10 88 முதல் மேலும் ஏகாம்பரம் இரகுநாதன் (24 வயது மட்டக்களப்பு), கனகு உதயகுமார் (23 வயது யாழ்ப்பாணம்), லியோன் மெக்னேல்ட் (வயது 21 திருமலை) ஆகிய மூவர் இணைந்துள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக எதிர்க்கும் சிங்கள இனவாத சக்திகளால் சூழப்பட்ட தென்னிலங்கைப் பகுதிகளில் இவர்கள் சிறைவைக்கப்பட்டிருப்பது இவர்களின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதைக் கவனத்திலெடுத்தேனும் இந்திய அரசு இவர்களை விடுவிக்க இலங்கை அரசை நிர்ப்பந்தப் படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஓ)

## பூரண துக்கப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி) புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது

இறந்த தலைவரின் பூதவுடலைப் பார்வையிடுவதற்காக மக்கள் பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்துக்கு பெருந்திரளாகச் சென்றவண்ணம் உள்ளனர்.

பூதவுடல் திங்கள் காலை 7-00 மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக வடமராட்சியின் பிரதான வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு 8 00 மணியளவில் வல்வை தீருவிலில் உள்ள புனித திடலில் உள்ள தியாகி-ளின் தூபிக்குச் சமீபமாக அலங்கார மேடையில் வைக்கப்பட்டிருக்கும்.

மக்கள் அஞ்சலியின் பின்னர் அங்கிருந்து பூதவுடல் ஊர்வலமாக பருத்தித்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 11-00 மணியளவில் இறுதிச் சடங்குகள் நடைபெறும்

(இ-118-70-160)

## செல்வி, தர்மினி ஆறுமுகம்

செல்வி தர்மினி ஆறுமுகம் 22. 10 88 அன்று அகால மரணமானார். இவர் யாழ் கனகரத்தினம் மகாவித்தியாலய 8 ம் ஆண்டு மாணவியாவார். இவர் ஆறுமுகம், நாகபூசனி ஆகியோரின் அன்பு மகளும், ராகவன், சுசித்திரா ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23. 10 88 இன்று பி. ப 3 00 மணியளவில் ஆடியபாதம் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருநெல்வேலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி. ஆறுமுகம்
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (7410)

# மரண அறிவித்தல்கள்

## யூட் மரியன் செல்வராஜன் (செல்வன்)

யூட் மரியன் செல்வராஜன் 21.10 1988 இல் அகால மரணமானார் இவர் திரு. எஸ் ஏ. மகேந்திரன், காலஞ்சென்ற திருமதி றீட்டா மகேந்திரன் அவர்களின் அன்பு மகனும் அசோக், ராஜன், மைக்கல், யூலியானா, யோசப், தேவா அருள் சகோதரி அன்றனிட் (தொட்டாஞ்சேனை) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்றுஞாயிறு 23ஆம் திகதி இல. 28 கொன்வன்ட் ரேட்டில் இருந்து நல்லடக்கத்திற்காக காலை 10 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுத்ததன்பின் ஆசனக் கோவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

தகவல் தருபவர்:
திரு. எஸ். ஏ. மகேந்திரன்
குலநாயகம்,
அச்சுவேலி. (7401)

## சின்னத்தம்பி ஆறுமுகம்

மண்டைதீவு 6ஆம் வட்டாரம் சின்னத்தம்பி ஆறுமுகம் காலமானார். இவர் வியாழமாவின் அன்புக் கணவரும், சச்சிதானந்தபிள்ளை (கற்பகம் வேலணை) ஏகானந்தசிவம் (வேலணை பிரதேச உதவி அலுவலகம், மண்டைதீவு) காலஞ்சென்ற சதானந்தசிவம், நித்தியானந்தசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தட்சாயினி (ஆசிரியை, கரம்பன்) என்பவரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 23 10 88 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 00 மணிக்கு நடைபெறும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சச்சிதானந்தபிள்ளை
ஏகானந்தசிவம்
6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. (7533)

## திருமதி லூர்து கோன்ஸ்ரன்ரைன்

அவனியில்:- 4- 12- 1922 இறைவனில்:- 21- 10- 1988

திருமதி லூர்து கொன்ஸ்ரன்ரைன் கரம்பொன் கிழக்கைச் சேர்ந்தவரும் திரு திருமதி அந்தோனிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திரு மரியாம்பிள்ளை கொன்ஸ்ரன்ரைனின் அருமை மனைவியும், காலஞ்சென்ற இம்மானுவேல் சிங்கராசா, திரு. அருமைநாயகம், திருமதி டெனிஸ்ரா அன்ரன், பிரான்சிஸ் சேவியர் [துரை), காலஞ்சென்ற அன்ரனி றொபேட் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அல்பிரெட், காலஞ்சென்ற மேரிப்பிள்ளை, பெனடிக்ற் கிறிஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோசவ் அன்ரன், கருணா பிரான்சிஸ் சேவியர் அவர்களின் அன்பு மாமியாரும், வேல்விழி (லண்டன்) யுஸ்ரன், கவிஷிபா, பொபிஸ்ரன், அருண் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24- 10- 88 திங்கள் காலை 9. 00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கரம்பன் புனித செபஸ்தியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
B.சிமாம்பிள்ளை
33/2 4ஆம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (7397)

## நடராஜா சசிவண்ணன் (ரவி)

[மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன்]

3 ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட சசிவண்ணன் 21-10-88 அன்று அகாலமரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நடராஜா அவர்களினதும், திருமதி மகேஸ்வரி அவர்களினதும் கனிஷ்ட புதல்வனும், டாக்டர் சசிதரன் (இங்கிலாந்து), சசிமாலா, சசிகலா(சுவிஸ்), சசிகாந்தன், சசிமோகன் (சுவிஸ்), சசிரேகா ஆகியோரின்அன்புச் சகோதரனும்,மோகனலதா (இங்கிலாந்து), தணிகாசலம் (கொழும்பு), சண்முகலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.10,88 இன்றுகாலை9மணிக்குஉடுவில்இல்லத்தில் நடைபெற்றுப்பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பூகோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சசிகாந்தன்.
K.K.S. வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (7408)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 23- 10- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 23rd October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org